
ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய - சமூக - இலக்கிய வெளியீடு



உலகம் உயிர்த்திட
உயிர்த்தனர் இயேசு
விலகும் கறையெலாம்
விலங்குகள் உடையும்!

ஏப்ரல் - 2014




40/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஏப்ரல் – 2014

மலர் - 46 இதழ் - 03

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.




## உள்ளே


அன்புடன் உங்களோடு .................. 01
உயிர்ப்பைத் தேடும் உள்ளம் ...... 02
உரோமாபுரியில் வெள்ளி .............. 04
எண்ணிப்பார்க்கையில் .................. 05
ஒளி தரும் உயிர்ப்பு ...................... 06
உயிர்ப்பு ஒரு வரலாற்று ................ 07
சிலுவை ............................................ 08
ஈஸ்டர் பார்ட்டி .................................. 09
தீர்க்கதரிசனங்களின் நிலம் ......... 12
திருத்தந்தை பிரான்சிஸ் ................ 14
பாஸ்கா திருவிழா ............................ 15
தொண்டனின் சில நிமிடங்கள் ..... 16
இலவுகாத்த கிளிகளாக ................. 18
சுடலை ஞானம் ............................... 20
கும்ரான் வாசிகள் ............................ 21
அரசனின் நோய் ............................... 22
வீட்டு மருத்துவம் ............................ 23
கலாபூஷணம் ................................. 24
புனிதர்களை அறிவோம் ................ 25
விவிலியம் கற்போம் ...................... 27
அறிவை வளர்ப்போம் .................... 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு....

கருகிவிட்டது என்று கல்லறைக்குள் வைக்கப்பட்ட இயேசு என்ற விதையானது, வைத்தவர்கள் மூச்சு வாங்குவதற்குள் முளைத்துவிட்டது.

ஆம், நாம் தவக்காலத்தின் இறுதிக்கட்ட நிகழ்வுகளுக்கு எம்மைத் தயார்செய்ய ஆயத்தமாக இருக்கின்றோம். ஆண்டவர் இயேசுவினுடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றைச் சிந்திக்க, தியானிக்க அழைக்கப்படுகின்றோம்.

வாழ்க்கையில் போராட்டங்கள் தேவை. ஆனால் போராட்டமே வாழ்வாகக்கூடாது. இதோ ஓர் ஊர்வலம். இறைக்கோட்பாடுகளையும், கொள்கைகளையும், மதிப்பீடுகளையும், மனித நேயத்தையும் மண்ணில் புதைத்த மனிதர்கள் மத்தியிலே போராட்டம். வாழ்க்கையில் வசந்தத்தைத் தேடாத மனிதனின் ஊர்வலம்.

அநீதிகள், அநியாயங்கள், அக்கிரமங்கள், அவலங்கள், சுயநலங்கள், சுரண்டல்கள், பதுக்கல்கள், வறுமைகள், அடிமைத்தனங்கள் இவற்றைத் தட்டிக்கேட்ட மனிதனின் ஊர்வலம். அன்று தொடக்கம் இன்று வரை நீதிக்காக, நேர்மைக்காக குரல் கொடுப்போரின் நிலை இவ் ஊர்வலம் தான்.

''கவலைகளைக் கண்டு கண்ணீர் வடிக்காமல்
போராடும் மனிதன் காலத்தால் அழியாதவன்''

இயேசுவும் போராடியபடியால்தான் அவர் இன்றும் காலத்தால் அழியாதவராய்ச் சரித்திரம் படைக்கின்றார். அன்று இயேசுவுக்கு அநியாயத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டு, சிலுவைச் சாவைப் பரிசாகக் கொடுத்தார்கள். ஆனால் இன்று தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் சிலரின் வாழ்க்கையை தொலைக்கும் நோக்குடன் கபடமாக நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு அநியாயத் தீர்வையிடப்பட்டு ''பூசா'' முகாம்களுக்குள் கைதிகளாகத் தள்ளப்படும் நிலையை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

ஆண்டவர் இயேசு சொன்னார்: ''பச்சை மரத்துக்கே இப்படியென்றால் பட்ட மரத்துக்கு என்ன நேருமோ'' என்று. உண்மைதான். அது இன்று உண்மையாக்கப்படுகின்றது. இந்நிலை மாறவேண்டும். மக்களின் மீட்புக்காகத்தான் ஆண்டவர் இயேசு சிலுவைச் சாவை ஏற்றார். கதிரவனை எவரால் கட்டிப்போட முடியும்? அவரைப் புதைத்துவிட்டதாக பகைவர்கள் பெருமை அடித்துக்கொண்டார்கள். அவரோ புயலாய்ப் புறப்பட்டார். இயேசுவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் பாவப்பட்ட மனித இதயம் புழுதி துடைக்கப்பட்டு புனிதம் அடைகிறது. அப்புனிதத்தின் அழகை வாசிக்க வார்த்தைகளே இல்லை.

இயேசு உயிர்த்ததால் நம் உள்ளத்தில் சிறு நம்பிக்கை பிறந்திருக்கிறது. நம்மை எதிர்க்க வரும் எந்த நெருப்பும் இனி அணைந்து போகும் என்னும் நம்பிக்கை. இயேசு உயிர்த்ததால் ஆண்டவரின் தூய ஆவி நம் அனைவரது இதயத்திலும் படர்ந்திருப்பதை உணரமுடிகிறது. அந்தத் தூய ஆவியின் ஆற்றலால் வர்மம், பகை என்னும் அக்கினிக் காற்றுப்பட்டு வற்றிக்கிடந்த இதயங்களில் இன்று அன்பின் வெள்ளம் அலை மோதுகிறது.

இயேசுவின் உயிர்ப்பு நாம் விண்ணக வாழ்வுக்கு உரியவர்கள் என்று பறைசாற்றுவதால் நம் மனதில் ஒரு புதுத் தெம்பு பிறக்கின்றது. பரிதாபம் என்னவென்றால், மண்ணக வாழ்க்கைப் பயணத்தின் இம் முடிவே தெரியாமல், தெரிந்தாலும் ஏற்றுக்கொள்ளாமல் ஏராளமானவர்கள் எதற்கோ, எப்படியோ வாழ்கின்றனர். அவர்களின் செருப்பும், பாதையும் தேய்ந்ததுதான் மிச்சம். இதை சிந்தித்து வாழ நாம் முற்படுவோம்.

மலை சாய்ந்தால் சிலையாவதுபோல்
மரம் சாய்ந்தால் விலையாவதுபோல்
மனிதன் சாய்ந்தால் மறு கிறிஸ்துவாக
உயிர்த்தெழ வேண்டும்!

உண்மை உறங்காது, அன்பு அழியாது, நம்பிக்கை நலியாது, இலட்சியம் தோற்காது என்பதை இதயவரிகளாக்கிக் கொள்வோம்.

''வாழ்வில் வழுக்கியவன், நம்பிக்கை இழக்கும் போது புதைந்துவிடுகின்றான். நம்பிக்கை இழக்காதவன் வழுக்கினாலும் விதையாகி விருட்சமாகின்றான்''


***"அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துகள்"***

ஆசிரியர்

## இறைவார்த்தை

**"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றுகின்ற நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்"**

*1 கொரி 15:14*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உயிர்ப்பைத் தேடும் உள்ளம் உலகம்

▶ உயிர்ப்பு விழாச் செய்தி

பேருள்தந்தை யோசப் பொன்னையா அவர்கள்

உயிர்ப்பிற்கு அவசியமானது இறப்பு. பிறக்கின்ற எல்லோருமே இறப்பார்கள் என்பது இயற்கையின் நியதி. கடவுளால் உருவாக்கப்பட்ட ஆதாமும் இறந்தார் (தொ.நூ 5: 4-5), விசுவாசத்தின் தந்தையான ஆபிரகாமும் இறந்தார் (தொ.நூ 25:17). ஈசாக், யாக்கோபு, சூசை, மோசே என எல்லோரும் இறந்தனர். வார்த்தை மனுவுருவான இயேசுவும் இறந்தார். நாமும் இறக்கின்றோம். சாவைச் சந்திக்கின்ற விதமும் பல்வகையானது. சிலர் நல் மரணம் அடைகின்றனர், சிலர் அகால மரணம் அடைகின்றனர், சிலர் சாகடிக்கப்படுகின்றனர், சிலர் தற்கொலை செய்துகொள்கின்றனர். வேறு சிலரோ பிறக்கும் முன்பே கருவிலேயே அழிக்கப்படுகின்றனர்.

"பாவத்தின் விளைவுதான் சாவு" என்று விவிலியம் நமக்கு அறிவுறுத்துகிறது. "ஒரே மனிதன் வழியாக பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாக சாவு வந்தது. அதுபோலவே எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது" (உரோ 5:12).

சாவுக்குப் பின் என்ன நடக்கும் என்பது பலருக்கும் புரியாத புதிராகவே உள்ளது. ஆயினும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு உத்தரவாதம் அளிக்கின்றது. இயேசு நம்மைப்போலவே மனிதராகப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து இறந்தார். இறந்த இயேசு மீண்டும் உயிர்பெற்று எழுந்தார். அதுபோலவே, இறக்கின்ற நாமும் உயிர்பெற்று எழுவோம் என்பது நமது நம்பிக்கையாகிறது. இதையே நாம் நமது நம்பிக்கை அறிக்கையில் "உடலின் உயிர்ப்பை நம்புகின்றோம்" என்று அறிக்கையிடுகின்றோம். ஏனெனில் இயேசு: "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வார்" (யோவா 11:25) என்று கூறுகின்றார்.

திருத்தூதர் பவுலும் உயிர்த்தெழுதல் உண்டு என்று கூறுகின்றார். "இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால் கிறிஸ்துவை உயிர்த் தெழச்செய்த அவரே உங்களுள் குடிகொண்டிருக்கும் தம் ஆவியினாலேயே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர்பெறச் செய்வார் (உரோ 8:11) என்று கூறி தூய ஆவியாரே நம்மை உயிர்பெற்று எழச் செய்வார் என்றும் கூறுகின்றார். எனவே, சாவுக்குப் பின் நாம் மீண்டும் உயிர் பெற்றெழுவோம் என்பது தெளிவாகிறது.

உயிர்ப்பின் நம்பிக்கை என்ற விதை திருமுழுக்கின்போது விதைக்கப்பட்டது. திருமுழுக்கினால் நாமும் அவருடைய பாடுகள் - சாவு - உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளில் பங்குபெறுகிறோம். அந்தப் பாஸ்கா மறைபொருளானது உயிர்ப்பு குறித்த நம்பிக்கையினால் ஊட்டம் பெற்ற ஆன்மீகத்தை நம்மில் தூண்டுகின்றது. அது உலகின் மாற்றத்திற்காக நம்மை அர்ப்பணிக்கத் தூண்டுகிறது. உயிர்ப்பு குறித்த நம்பிக்கை ஓர் எதிர்நோக்கைக் கொண்டிருக்கிறது. அது கடவுள் மனிதருக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்பாடு செய்திருப்பதைச் சொல்கிறது. துஞ்சினோரின் முதற் கனியாகிய அவர் நமக்கு முன் விண்ணேறிச் சென்று வான் வீட்டின் கதவுகளை நமக்காகத் திறந்து வைத்துள்ளார். அவர் ஏறிச்சென்ற இடத்திற்கே நாமும் செல்வோம் எனும் நம்பிக்கையை நாம் கொண்டுள்ளோம்.

எனவே, அவரைப் போலவே வாழ அழைக்கப்பட்டுள்ளோம். அதுவே, உயிர்த்த வாழ்வு. எனவேதான் கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை வைத்த பவுலடியார் "இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:20) என்று கூற முடிந்தது.

உயிர்த்த வாழ்வு வாழ்வதென்பது கிறிஸ்துவின் உடலாக வாழ்வதாகும். அவ்வாறு வாழ்வது கைவிடப்பட்டோருக்கும், துன்புறுத்தப்படுவோருக்கும் ஏழையருக்கும், மனித உரிமை மறுக்கப்படுவோருக்கும் உண்மையுள்ளவர்களாய் நாம் வாழ்வதில் அடங்கி இருக்கிறது. இயேசுவின் உயிர்ப்பின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையானது நாம் ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களாய் இறையாட்சிக்காக உழைத்திட அழைப்பு விடுக்கின்றது.



உயிர்த்த வாழ்வு இவ்வுலகிலேயே வாழப்பட வேண்டும். உயிர்த்த வாழ்வின் இலக்கு நிலைவாழ்வு, நிலையான வாழ்வு. இயேசுவின் உடலை உண்டு அவரது இரத்தத்தைப் பருகுபவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் இயேசுவின் உடலாக மாற அழைக்கப்படுகின்றனர். நாம் உட்கொள்ளும் உணவு நமது உடலாக மாறுகின்றது. ஆனால், நற்கருணையை நாம் உட்கொள்ளும்போது நாம் நற்கருணையாக மாற அழைக்கப்படுகின்றோம். அதாவது உயிர்த்த உடலாக மாறுகின்றோம். இயேசுவின் உடலை உண்டு இயேசுவாக மாறும் (மாறின) மனிதர்கள் இறந்தும் உயிர் வாழ்கின்றனர்.

பவுலடியார் கூறுவது போன்று உயிர்த்த வாழ்வு வாழ நாம் தினமும் இறக்க வேண்டும். "உயிரோடிருக்கும் போது நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்றுகொண்டிருக்கின்றோம். சாவின் ஆற்றல் எங்களிலும், வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகின்றது (2 கொரி 4: 11-12). உதாரணமாக, ஒருவர் தன்னலத்துக்காக இறக்கும் போதுதான் வாழ்வு பெறுகின்றோம். எனக்கடுத்து வாழ்பவரும், என்னைச் சுற்றி வாழ்பவரும் கிறிஸ்துவின் உடல் என நான் காண்கின்றபோது உயிர்த்த வாழ்வுப் பயணத்தின் முதல் படியில் காலடி வைக்கிறேன். உயிர்த்த உள்ளங்களாக, உயிர்ப்பைத் தேடும் உள்ளங்களாக ஒவ்வொருவரும் மாறுவோம், அப்போது உலகமே மாறும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உரோமாபுரியில் வெள்ளிவிழாக் கண்ட அருட்திரு ஜோர்ஜ் திசாநாயக்க

திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க தனது குருத்துவத்தின் 25வது ஆண்டு நிறைவை "Pontificio Collegio Filippino" ல் கொண்டாடினார். 52 வருட வரலாற்றைக் கொண்ட "Pontificio Collegio Filippino"ல் முதன் முதலாக ஒரு குருத்துவ மாணவன் வெள்ளி விழாவைக் கொண்டாடியது இதுவே முதற் தடவையாகும். அவரது நன்றித் திருப்பலி பங்குனி மாதம் 14ம் திகதி ஐந்து மொழிகளில் "Pontificio Collegio Filippino"ல் நடைபெற்றது. இலங்கையைச் சேர்ந்த மாணவ ஒன்றியமும் "Pontificio Collegio Filippino" மாணவ ஒன்றியமும் இணைந்து நடாத்தினர். இந்நிகழ்விற்கு இலங்கையைச் சேர்ந்த அருட்பணியாளர்களும் சமயப்பற்றுடைய பொதுநிலையினரும் தூய தோமஸ் அக்குவாயினஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க யாவருக்கும் அறிமுகமானவர். இவர் 1961ம் ஆண்டு மார்கழி மாதம் 13ந் திகதி கிழக்கு மாகாணத்திலுள்ள யாத்திரை ஸ்தலமாகிய தூய செபமாலை மாதா ஆலயம் எழுந்தருளிய புல்லுமலையில் அவதரித்தார்.



இது அம்பாறை மாவட்ட எல்லையிலுள்ள ஒரு கிராமம். இக் கிராமம் மட்டக்களப்பு A5 வீதியில் அமைந்துள்ளது. தனது ஆரம்பக்கல்வியை இக்கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையில் கற்றார். இவர் காலம் சென்ற பிரான்சிஸ் சேவியர் கிரிபண்டா திசாநாயக்க, மேரி அக்னஸ் என்பவர்களின் மகனாவார். இவர் திருகோணமலையில் உள்ள தூய சூசையப்பர் ஆரம்ப குருமடத்தில் 1977ல் சேர்ந்தார். அங்குத் தமிழையும் சிங்களத்தையும் கற்றார்.

1981- 1984ல் யாழ் நகரில் அமைந்துள்ள தூய பிரான்சிஸ் சேவியர் குருமடத்தில் மெய்யியல் கற்றார். அதன் பின்னர் மட்டுநகர் வித்துவான் FXC நடராசா மூலம் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றார். 1985ல் தேசிய குருமடத்தில் சேர்ந்து இறையியல் கற்று B.Th Rome என்ற தகைமையையும் பெற்றார்.

1989ம் ஆண்டு பங்குனி 14ம் திகதி திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட அதிவந்தனைக்குரிய மேதகு ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் திருநிலைப் படுத்தப்பட்டார். இவர் பல ஆலயங்களின் பங்குத்தந்தையாக அளப்பரிய சேவைகள் ஆற்றி 2003 – 2012ம் ஆண்டு வரை தூய மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். அந்நாட்களில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் , மறைக்கல்வி திருவழிப்பாட்டு திருவிவிலிய பல்சமய உரையாடல் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக் குழுவிலும் பணியாற்றினார். அருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணிப்பார்க்கையில்.... 04



ஒரு மனிதனின் வாழ்வு என்றும் அடுத்தவர்க்குப் பாடமாக அமைவது உண்டு. இதனால் அடுத்தவனைப் பார்த்துத் தம் வாழ்வைத் திருத்திக்கொள்பவர்கள் நிறைய உண்டு!

இப்படியாகத் தம் வாழ்வைத் திருத்த விழைகின்றவர்க்கு உதவியாக நம் வாழ்வைத் திறந்த புத்தகமாக வைப்பது மேலானதான ஒரு செயலாக இருக்கின்றது.

ஆனாலும் நம் வாழ்வை எல்லோருக்கும் தெரிந்த புத்தகமாக மாற்றியமைப்பது சில சமயங்களில் தவறியும் விடுகின்றது!

ஆழமாக எண்ணிப் பார்க்கையில்.. ஒரு சிலர் தான் அடுத்தவர் வாழ்வை படிப்பதன் மூலம் தம் வாழ்வில் மாற்றம் காண்கிறார்கள்.

இன்னும் பலரோ வெறும் விடுப்புக்காகவே அடுத்தவர் வாழ்வை உற்றுநோக்குகிறார்கள் என்பது புரிகிறது!

● ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்



கொடைப்பணிகளையும் அநேகமான நாடுகளுக்குச் சென்று நடாத்தினார்.

"அஸ்கிரிய மல்வத்த" பீடாதிபதியினால் முதன் முதலாக கத்தோலிக்க அருட்பணியாளர் ஜோர்ஜ் திசாநாயக்க அவர்கள் 1994 – 2012ம் ஆண்டு யுத்த காலப் பகுதிகளில் பல்சமய ஒன்றிப்பிற்காகவும், இன ஒற்றுமைக்காகவும் , சமாதானத்திற்கும் ஆற்றிய பணிகளுக்காக "தேசமான்ய" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது சிறப்பம்சமாகும்.

றோட்டரிக் கழகத்தினால் சர்வதேச விருது பெற்ற இவருக்கு தேசபந்து, தேச மாணவ ஹிதாஷி, சாம மாண்ய, அகில இலங்கை சமாதான நீதிவான் விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இலங்கை நீதி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற மும்மொழி, மொழி பெயர்ப்பு (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) பரீட்சையில் சித்தியடைந்த ஒரேயொரு கத்தோலிக்க அருட்பணியாளர் இவராவர்.

உரோமை தூய தோமஸ் அக்குவினாஸ் பல்கலைக்கழகத்தின் முதுமானிப் பட்டப் படிப்பின் இறுதியாண்டு மாணவரான அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க சென்ற ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற உலகத் திருச்சபைக் கூட்டத்தில் வத்திக்கான் பிரதிநிதியாக பங்குபற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது எதிர்காலம் செழிப்பாக அமைய இறைவனிடம் மன்றாடுவோம். ▮

**திருமதி. ஆஞ்சலீன் சுப்ரமணியம் - திருகோணமலை**

குறும்(புப்)பா – 129

**கல்வாரிக் கழுமரத்தில் மாண்டார்**
**கல்லறைக்கு ளடங்காமல் மீண்டார்**
**கள்ளமனக் கல்லறைக ளுடைத்துநா முருமாறி**
**உள்ளமதி லுயிர்ப்பின்றி வேண்டார்**

- லேர் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# ஒளி தரும் உயிர்ப்பு!

**வா**ர்த்தைகள் மெய்த்திட கல்லறை விட்டு
மனுமகன் உயிர்த் தெழுந்தார்!
ஆர்த்தெழுந்தாடிய அலகையின் மைந்தர்
ஆ! வென வாய் பிளந்தார்...!
நேத்திரம் ஒளியிற் பூத்திடக், காத்து
நின்றவர் நிலை மறந்தார்!
தோத்திரம் செய்து துதித்தனர் மக்கள்
தூயவர் உயிர்ப் பறித்தே!

கொடுமையில் நனைந்து குருதியில் தோய்ந்து
குவலய இருள் சுமந்தார்
அடிமைகள் வாழ்வில் அவலங்கள் மாய்ந்து
அருள் பெறச் சுதினெழுந் தார்!
விடுதலை வாழ்வில் மேதினி மாந்தர்
மீண்டெழ வழிபுனைந்தார்!
மிடிமையில் உழன்று வேதனைத் தீயில்
வீழ்ந்தவர் துயர் களைந்தார்!

எங்கணும் எலும்புக் கூடுகள் கிழம்பும்
எமதருந் தாயகத்தில்
பொங்கிடுங் கண்ணீர் புலம்புவோர் ஓலம்
போய் மகிழ்வென்று வரும் ....?
தெங்கிள நீராய்ச் சிதறிய தலைகள்
திரும்பவும் சிரித்தெழு மா?
உங்களின் உயிர்ப்பின் உன்னதம் எமக்கோர்
ஒளிதரும் உமைத் துதிப்போம்!

■ கவிஞர் நிலா தமிழின் தாசன் ■



## குறுக் கதை 55



# உதவியாளர்

**ஒ**ரு பிற்பகல் வேளை அன்ரன் கட்டிலில் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அவரின் சிறிய மகன் அவருக்கு மேல் ஏறி, அவரைக் கட்டிப் பிடித்து, நசித்து விளையாடிக்கொண்டிருந்தான்.

அவ்வேளையில், அவ்விடம் வந்த அன்ரனின் மனைவி தன் மகனிடம் இவ்வாறு சொன்னாள்

"அடேய் தம்பி, அப்பாவ அரியண்டப்படுத்தாத மனே! கழுத்த நசிச்சிக் கிச்சிச் சாகவச்சுப் போடாதப்பா! எனக்கு இருக்கிற ஒரேயொரு உதவி அந்த மனிசன்தான்"

தாய் அவ்விடம் விட்டு அகன்றதும், அந்த இரண்டாம் வகுப்புப் பையன் தகப்பனிடம் சொன்னான்,

"அப்பா! அவ உங்கள கஸ்பண்டா நினைக்கல்ல ஒரு ஹெல்ப்பராத்தான் நினைச்சிருக்கா"

அன்டனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

இக்காலப் புள்ளயலுக்கு மண்ட முழுக்க மூள என்று எண்ணிக்கொண்டார்.

■ பற்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிர்ப்பு ஒரு வரலாற்று நிகழ்வா?

உயிர்ப்பு ஒரு வரலாற்று நிகழ்வா? என்ற கேள்வி ஓர் இருபதாவது நூற்றாண்டுக் கேள்வி எனலாம். வரலாற்று நிகழ்வாகிய உயிர்ப்பின் தொடர்ச்சியே உயிர்ப்பு பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கை என்பதே காலங்காலமாக நம்பப்பட்டுவந்த உண்மை. மேலே எழுப்பப்பட்ட கேள்வியை முதலில் எழுப்பியவர் விவிலிய அறிஞர் 'புல்ட்மானாகும்'. அவரும் உயிர்ப்புப் பற்றிய வரலாற்றுத் தன்மையை விடவும் சீடர்களின் நம்பிக்கையே உயிர்ப்பு நம்பிக் கைக்கு மிக முக்கியம் என்று வலியுறுத்துவதற்காக புல்ட்மான் இத்தகைய கேள்வியை எழுப்பினார். இதன்பிறகு 20ஆவது நூற்றாண்டின் இறுதியில் 'டிறேவர்மான்' என்ற இறையியலாளர் உயிர்ப்பு நிகழ்வை மறுத்து அது தரும் அர்த்தத்தை முக்கியம் என்று கருதினார். அது திருச்சபை ஆசிரியத்தாலும் பல முன்னணி இறையியலாளர்களாலும் கண்டிக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் இறையியல் கருத்து ஒரு விசுவாச நிகழ்வின் வரலாற்றுத் தன்மையையும் அது தரும் ஆழமான அர்த்தத்தையும் பொறுத்தே அமையும். மேலும் வரலாற்று அடிப்படையற்ற அர்த்தங்கள் நிலைக்க இயலாது; ஆழமான பாதிப்பை ஏற்படுத்த இயலாது.

எனவே, புனித பவுலோடு சேர்ந்து உயிர்ப்பு நிகழ்வின் வரலாற்றுத் தன்மை அதிகமாக வலியுறுத்தப்படவேண்டிய ஒன்றாக அமைகிறது. அதே சமயம் இந்த வரலாற்று நிகழ்வு பிற வரலாற்று நிகழ்வுகள் போன்ற ஒரு வரலாற்று நிகழ்வா அல்லது வரலாற்றைக் கடந்த ஒரு வரலாற்று நிகழ்வா என்ற கேள்வி இறையியல் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. பிற வரலாற்று நிகழ்வுகள் போன்றே முழுக்க முழுக்க நிரூபிக்கப் படக்கூடிய வரலாற்று நிகழ்வே இயேசுவின் உயிர்ப்பு என்று வாதிடக் கூடியவர்களில் 'பாணன்பெர்க்' போன்ற தற்கால இறையியலாளர்களும் உண்டு. இவர்கள் இயேசு தனது சீடர்களுக்கு வழங்கிய உயிர்ப்புக் காட்சிகளையே உயிர்ப்பின் நிரூபணங்களாகக் கருதுகின்றனர். அதேசமயம் புனித அக்குவின் தோமா போன்ற மிகப் பெரிய கத்தோலிக்க இறையியலாளர் இதனை வரலாற்று நிகழ்வு என்று குறிப்பிடுகின்றனர். அது என்ன வரலாற்றைக் கடந்த வரலாற்று நிகழ்வு? இயேசுவின் உயிர்ப்பு, வரலாற்றில் நிகழ்ந்துள்ள ஒரு வரலாற்று நிகழ்வே. ஆனால், அது பிற வரலாற்று நிகழ்வுகள் போன்று வரலாற்றுக் காரணிகளின் துணைகொண்டு நிரூபிக்கப்படக் கூடியது அன்று என்பது இவர்களின் கருத்து. "சிலுவையில் அறையுண்ட இயேசுவை ஊனக் கண்களால் கண்டவர்கள், உயிர்த்த இயேசுவை நம்பிக்கைக் கண்களாலேயே காண முடிகிறது" →




■ ஆனந்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிலுவை



இயேசு இல்லாமல் இனி சிலுவை இல்லை
சிலுவை இல்லாமல் இயேசுவும் இல்லை!

தண்டனையின் சின்னம்
தண்டனிட்டு வணங்கப்படுகிறது
இப்போது!

சிலுவை என்பது ஆயுதமல்ல:
ஆயுதம் ஏந்துகிறவன்
அடுத்தவனைக் கொல்கிறான்
சிலுவையை ஏந்துகிறவன்
தன்னையே தருகிறான்!

நீதித் தராசு 'தீர்ப்பு' சொல்கிறது!
சிலுவையோ 'தீர்வு' சொல்கிறது!

குறுக்கும் நெடுக்குமான
இருகோடுகள்,
தீமையை வெல்லும்
நன்மையாய்!

இந்த உலகின்
இரு எதிர்மறைகளாலும் கூட
ஓர் உடன்பாட்டை அடையமுடியும்
என்று நிரூபிக்கும்!

■ நிர்மலா சுரேஷ்

→ என்றார் புனித அக்குவின் தோமா.

இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை. இது ஒன்றே வரலாற்றில் வாழ்ந்த மாமனிதர்களிடமிருந்து இயேசுவைப் பிரித்து இறைமகனாக இனங்காட்டுகிறது. இயேசுவின் இறப்பால் கோழைகளாக மாறிய அவரது சீடர்கள் அவரது உயிர்ப்பால் மட்டுமே தங்களது உயிரையும் தரக்கூடிய வீரர்களாக மாறியிருக்கச் சாத்தியம் உண்டு. உயிர்த்த இயேசுவின் ஆவியைப் பெற்றவர்களே அவரது உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தார்கள். இயேசு உயிர்க்காவிட்டால் கிறிஸ்தவம் என்னும் மாபெரும் இயக்கம் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. மேலும், அது வரலாற்றில் பல்வேறு சோதனைகளைச் சந்தித்து வெற்றி பெற்றிருக்கவும் வாய்ப்பில்லை. அர்த்தம் பொதிந்த வரலாற்று நிகழ்வாகிய இயேசுவின் உயிர்ப்பு இந்த மானுடத்திற்கு மறு உலக மெய்மையின் வரலாற்று அடையாளமாக அமைந்துள்ளது.



●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனக்கு கையும் ஓடவில்லை..... காலும் ஓடவில்லை..... மனம் தீயாய்த் தகித்தது. உள்ளத்தின் ஆழத்தில் எழுந்த வெறுப்பு முகத்தில் நெருப்பாய்க் கனன்றது ....

'சீய்ய்ய் ........ என்ன மனிதர் இவர்! இப்படியும் ஒருவரா....? இயேசு, ஒருவரை ஆயிரம் தடவையும் மன்னிக்கலாம் என்று கூறியது சரிதான்... ஆனால் இவர் ........'

மம்மியைப் பார்க்கிறேன்.... கவலையும், கோபமும், ஆத்திரமும், ஏமாற்றமும் ஏன்.... இயலாத் தனமும் கலந்து கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் ...... வேறு கதியில்லாமல் சோர்ந்துபோய் நிற்கிறார்... என்னால் அப்படி நிற்க முடியவில்லை. இனியும் முடியாது....! தீர்க்கமான தீர்மானத்துக்கு வந்துவிட்டேன்.

"கெட் அவுட் டடீ ....
டோன்ற் கம் டு திஸ்
கவுஸ்
எகெயின்.....
நோ எக்ஸ்கியுஸ் போ யூ..."


காட்டமாகக் கத்தினேன்.

•

அப்போது எனக்கு பத்து வயதிருக்கும்.... எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது ......

பிறிமாவில் வேலை செய்த டடீ ... கை நிறையச் சம்பளம் பெறுவார் .... நான், எனது தம்பி, தங்கை ..... மூவர் கொண்ட அளவான குடும்பம் ..... மிகையான வருமானம் ...... எங்கள் தேவைகள் எல்லாம் எவ்வித தடைகளுமில்லாமல் நிறைவேறின.....

டிசம்பர் மாதம் தொடங்கினாலேயே எங்கள் வீட்டில் 'பார்ட்டி' ஆரம்பித்துவிடும்...... அது பொங்கல்வரை தொடரும்..... சமைத்துக் கொடுத்தே அம்மா களைத்து விடுவார். ஆனால், இந்த உல்லாசமும் ..... சல்லாபமும் டடீக்கு வேலையில்லாமல் போகும்வரை தொடர்ந்தது..... சம்பளத்தோடு போனசும் கிடைத்ததால் உலகமே மறந்துவிட்டது அவருக்கு. தொடச்சியாக ஒன்றரை மாதம்



# ஈஸ்டர் பார்ட்டி

- கிறிஸ்டி முருகுப்பிள்ளை

~ சிறுகதை ~

வேலைக்குப் போகவில்லை. வேலையிலிருந்து டிஸ்மிஸ் பண்ணிய கடிதம் வந்ததும் அவர் விழித்துக்கொண்டார்...

எங்கெல்லாமோ ஓடினார்.... பலரையும் சந்தித்தார்..... அம்மாவின் நகைகள் பலவற்றை விற்று பார்ட்டி கூட வைத்துப் பார்த்தார். ஊஹூம் ..... புதிதாக வந்த பக்டரி மனேஜர் மசியவேயில்லை.....

குடும்பம் தள்ளாடிப்போனது .... வேறு வேலை தேடினார்..... முன்பெல்லாம் இவரின் 'பார்ட்டி' யில் பங்கேற்றவர்கள் இவர் ஒரு 'கொன்டினியூஸஸ் ட்ரிங்கர்' என்று போட்டுக் கொடுத்துவிட்டார்கள். எதுவுமே சரிவரவில்லை.... நாங்கள் சேர்ச்சுக்குப் போவதையும் நிறுத்திக் கொண்டோம்.



மம்மியின் உறவினர் ஒருவரிடம் மம்மி கெஞ்சிக் கேட்டதால் அவரின் நண்பரின் டூரிஸ்ட் ஹொட்டலில் வெயிற்றர் வேலை கிடைத்தது. குடும்பத்தின் நிலையில் மாற்றம் ஏற்படும் என ஆவலுடன் எதிர்பார்த்தோம்...

ஊஹூம் ... கிடைக்கும் டிப்ஸ், எஞ்சிய ட்ரிங்ஸ்... இவரை மேலும் குடிக்கத் தூண்டின. ஹோட்டலில் கிடைக்கும் ருசியான உணவு வீட்டில் கிடைக்காததால் மம்மிக்கும் டடிக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. ஆரம்பத்தில் வீட்டுக்குள் மட்டுமே கேட்ட சத்தம், பின்னர் வீதியில் பலர் வந்து பார்க்குமளவுக்கு அதிகரித்து விட்டது. இங்கிலிஸில் தொடங்கும் சண்டை வேறு மொழிகளிலும் தொடர்ந்தது ..... இது அம்மாவின் கை, கால், மண்டை உடைவில் போய் முடியும்

அடிக்கடி மாதக் கணக்கில் டடி வீட்டுக்கு வராமல் ஹோட்டலிலேயே நின்று விடுவார்.... ஜி.சி.ஈ. ஓ.எல் எக்ஸாம் எழுதிய போது எந்தவித ரியூசனுக்கும் செல்லாமலேயே சிறப்பாக என்னால் எழுத முடிந்தது.... இரண்டு வருடமாக எங்கள் குடும்பம் நிலை குலைந்து போனது. பாதரினால் வழங்கப்படும் காணிக்கைப் பொருட்களை நம்பி எமது குடும்பமும் வாழ்ந்தது .....

இடையிடையே டடி வீட்டுக்கு வந்தாலும், மம்மிக்கு ஒரு சதம்கூடக் கொடுக்காமல் டேஸ்ட்டான உணவு எதிர்பார்த்ததால் அடிதடியில்தான் முடிந்தது ..... என்னால் பொறுக்க முடியாமல் ஒரு தடவை பொலிசுக்கு கோல் பண்ணினேன் .....

மம்மியின் காயங்களைப் பார்த்த அவர்கள், அதிர்ச்சியடைந்து டடியை பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கூட்டிச் சென்றனர். மம்மியையும், என்னையும் மறுநாள் விசாரணைக்காகக் கூப்பிட்டனர். மம்மி..... உறுதியாகவும் இறுதியாகவும் கூறிவிட்டார்.

"ஐ டோன்ட் வோன்ற் திஸ் மேன் .... ஐ லைக் டு டிவோஸ் திஸ் யூஸ்லெஸ் ஃபெலோ....."

பொலிஸ் ஒரு முடிவுக்கு வந்தனர். இனி டடியை எங்கள் வீட்டுக்கு வரக்கூடாது. கோர்ட்டில் கேஸ் போடுகிறோம், முடியும் வரை பிரிந்திருக்க வேண்டும் என்று முடிவாகக் கூறிவிட்டனர். "தந்தையோடு கல்வி போகும், தாயோடு அறுசுவை போகும்" என்று தமிழ் சேர் கற்பித்தது ஞாபகத்திற்கு வந்தது.

எனது ஏ.எல். படிப்பு ஒழுங்காகச் செல்லவில்லை .... திரி எஸ் உடன் ரிசல்ட் வந்தது. ஃபமிலி நிலை மோசம் ..... ஏதாவது செய்ய வேண்டும் .... உள்ள ரிசல்ட்டோடு வேலை தேடினேன். எனது ஸ்கின் கலர் ... நான்கு மொழி பரிட்சயம் ... வயது ... எல்லாம் அந்த பிறைவட் பேங்கில் ஜொப் கிடைக்க வழி செய்தது ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மீண்டும் தேறிக்கொண்டு வந்தோம். பிறதர், சிஸ்டர் ஸ்டடியை நானே கவனித்தேன். இந்த நிலையில், சென்ற ஜனவரி மாதம் டடீ வீட்டுக்கு வந்தார் .... மம்மியின் காலில் விழுந்தார் ....

"பிளீஸ் போர்கிவ் மீ ஜெஸி.... போர்கிவ்....."

அவரின் நிலை கண்டு நெகிழ்ந்தோம்... மூன்று மாதத்திற்கு முன்பாக ஹோட்டல் தொழிலும் போய்விட்டதாம்.... தான் திருந்தி விட்டாராம் ... இனி குடிக்க மாட்டாராம் ... புரொமிஸ் பண்ணினார். நாங்கள் நம்பினோம். எங்கள் பேங்க் கஸ்டமரான டொக்டர் அங்கிளிடம் கேட்டு, 'செக்யூரிட்டி கார்ட்' வேலை பெற்றுக் கொடுத்தேன். அப்போது பாஸ்கு காலமும் தொடங்கியது..... ஆஸ் வெனிஸ்டேயன்று சேர்ச்சுக்குப் போய்வந்த பின்பு டடீ அனைவரின் தலையிலுமடித்து சத்தியம் செய்தார்,

"ப்ரோமிஸ் ஐ நெவர் கெட் ட்ரிங்ஸ்" சந்தோசமா இருந்தது.

அன்று புனித சனி இரவு, மிட் நைட் மாஸ்க்குப் போகத் தயாரானோம். டடியைக் காணவில்லை. ஈவினிங் ஆறு மணிக்கே வருவதாகக் கூறியிருந்தார். ஒன்பது மணியாகியும் வரவில்லை. பதினொன்றரைக்கு சேர்ச்சுக்குப் போகவேணும்... அவருக்குரிய ட்ரெஸ்ஸை அயன் பண்ணி மம்மி தயாராக வைத்திருந்தார்.

"என்ன மம்மி... இன்னும் டடியைக் காணல்ல ... நேற்று சலரி எடுத்தவரல்லவா? உங்கள்ட்ட தந்தவரா.....?"

"இல்ல பிரீத்தி...."

அப்போதுதான் வீட்டின் முன்னால் ஓட்டோ ஒன்று நின்றிருந்தது....
எட்டிப் பார்த்தேன்.... மேலும் இருவரின் கைத்தாங்கலில் டடி தள்ளாடித் தள்ளாடி உள்ளே சென்றார். சாராய நாற்றம்.... அனைவரும் குடித்திருந்தனர்..... நாங்கள் பயந்துவிட்டோம் .....

"மச்சான் உள்ள வாங்கடா.... இண்டைக்கு விடிய விடிய ஈஸ்டர் பார்ட்டி இங்கதான்டா.... அந்த போத்தல்கள உள்ள வை....."

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.... திருந்திவிட்டாரென நம்பினோமே ....
உள்ளத்தில் எழுந்த வெறுப்பு எல்லாம் ஒருமித்து கோபம் கொப்பளிக்க,

"ஹூ ஆர் யூ மேன் ... ஹூ ஆர் யூ? பிளீஸ் கெட் அவுட் ஐசே....."

"ஐ ஆம் யுவர் ... டடி .... டோட்டர்"

"நோ .... நோ .... யூ ஆர் நொட் அவர் டடி, ஹலோ ஐஸே கெட் அவுட் ஓல் ஒப் யூ..."

வெறியில் தள்ளாடிய மற்ற மூவரும் என்னை ஆறுதல்படுத்த முயன்றனர்.

"நாங்க ஒரு கரச்சலும் பண்ண மாட்டம் டியர் .... நீங்க சேர்ச்சுக்கு போங்க....."

"ஹூ ஆர் யூ மேன்.... கெட் அவுட் ஓல் ஒப் யூ..."

எனக்கு எங்கிருந்துதான் அந்த தைரியம் வந்ததோ, அவர்களை வெளியே தள்ளிவிட்டு கதவை சாத்தி பூட்டிவிட்டேன். உள்ளே இருந்து கத்தினேன்,

"டடி ... உங்களுக்கும் எங்களுக்கும் இருந்த உறவு இன்றோடு பினிஸ் ..... எங்கள வாழ விடுங்க..... டோன்ட் டிஸ்ரப் அவர் லைப். யூ கன் கோ நௌ...."

உறுதியாகத்தான் சொன்னேன்.... ஒரு தீர்க்கமான முடிவுடன் மம்மியைப் பார்த்தேன். எத்தனை நாள்தான் சகிப்பார். எங்கள் முடிவை அங்கீகரித்தபடி எங்கள் மூவரையும் அணைத்துக்கொண்டார். வெளியே நின்ற ஆட்டோ புறப்பட்ட சத்தம் கேட்டது. மனம் நிம்மதியாக இருந்தது.
நேரம் பன்னிரண்டாகிவிட்டது.

இயேசுவின் முன் மண்டியிட்டு செபிக்கத் தொடங்கினோம்.

**- யாவும் கற்பனை -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்க்கதரிசனங்களின் நிலம் 03

பயணக் கட்டுரை



○ அ.ச. பாய்வா

இஸ்ரேல் எல்லையின் *HUSEIN BY*ல் இறங்கிய எனக்கு நினைவுக்கு வந்தது, நம் ஓமந்தைச் சோதனைச் சாவடிதான். அத்தனை இறுக்கமும் கெடுபிடியும். ஆனால் யோர்தான் பகுதியில் பார்த்த மலைக்குன்றுகள் போலல்லாது இங்கிருந்த குன்றுகள் ஏதோ ஒருவித ஒழுங்கமைப்பில் மனிதர்கள் செதுக்கியதுபோல் காணப்பட்டன. அப்பிரதேசத்தை நிழற்படமெடுக்க அனுமதி மறுத்துவிட்டார்கள்.

இஸ்ரேல் எல்லையில் நவீன சோதனைக் கருவிகள் மூலம் எவரையும் துன்புறுத்தாது சோதனை செய்ததுதான் அதன் சிறப்பு. ஒரு கேள்வி கிடையாது. யாவுமே ஒரு வினாடி 'எக்ஸ்ரே' பார்வையோடு முடிந்துவிடும்.

சோதனைகள் முடிந்து வண்டியில் அமர்ந்திருந்தபோது இன்னுமொன்றைக் கண்டேன். வேறென்ன...! நமது ஊர்க் குருவிகள்தான். அருகில் சென்று பார்த்தேன். ஒரேயொரு வித்தியாசம். அவை அளவில் சிறியதாயிருந்தன. அத்தனை கெடுபிடிக்குள்ளும் எனது 'தமிழன் மூளை' வேலை செய்ய கண்ணை மூக்கைப் பார்த்து அவற்றை என் நிழற்படக்கருவிக்குள் அடக்கினேன்.

அந்த எல்லைகளின் மட்டில் ஒரேயொரு சிரமம். இஸ்ரேல் பலஸ்தீனம், பலஸ்தீனம் இஸ்ரேல் என எல்லைகளூடாக மாறி மாறிப் பயணஞ் செய்ய நேர்ந்ததால், அடிக்கடி வழி காட்டிகள் மாறிக்கொண்டேயிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதனால் இவை தொடர்பான சில உண்மைத் தகவல்களைப் பெறுவது கடினமாயிருந்தது. தங்குமிடங்களில் வைத்து (பிரமாண்டமான ஹோட்டல்கள்) அவற்றைப் புடைத்தெடுக்கப் பெரும்பாடாகிவிடும். அந்த மண்ணின் வித்தியாசமான வடிவமைப்பை இரசித்த வண்ணம் கலிலே யாவுக்குள் நுழைந்து கொண்டிருந்தோம். பாரிய வீதியமைப்பு. மலைகளைத் தகர்த்துவிட்டு அமைக்கப்பட்ட அகன்ற, நீண்ட நெடுஞ்சாலைகள்தானெங்கும். ஊருக்கு ஊர் பாரிய இடைவெளிகள். இங்குமாதிரி கையை நீட்டி வாகனத்தை நிறுத்தும் வேலையெல்லாம் அங்கில்லை. பார்க்குமிடமெங்கும் குன்றுகள். ஏனைய நிலப்பரப்பில் நிறைந்து கிடந்தது விவசாயமே. பெருஞ், சிறு பண்ணைகளாய் வகுத்துக்கொண்ட பாரிய பயிர்ச் செய்கை என உழைப்பினால் மனிதர் வசமாகிப்போன அந்தக் கலிலேயப் பாலை நிலப்பகுதியில் முதற் தரிசனம் கிட்டுகிறது.

இருபத்திரண்டாயிரம் சதுர கிலோமீற்றர் விஸ்தீரணமும் ஏழரை மில்லியன் சனத்தொகையும், அறுபது வீத வனாந்தரமும் நாற்பது வீத பசுமையும் கலந்த அடுத்த கட்டத்துள் சுமார் நாற்பது நிமிடப் பயணத்தின் பின் நுழைந்தோம்.

நமது குருநாகல் பகுதிகளில் காணப்படும் தென்னந் தோப்புகளைப் போன்று பாளை விரிந்த பாரிய பேரீச்சைத் தோட்டங்கள், வான்கோழிப் பண்ணைகள், மரக்கறித் தோட்டங்கள், தோடை, குட்டையான வாழையென எங்குமே யூதர்களின் கைவண்ணம் திகழ்ந்தது. பலஸ்தீனியர்களின் உழைப்பும் அதில் கலவாமலில்லை. 'ஹய்பா' வை (HAIFA) நோக்கிச் செல்லும் வழியில் 'யிஸ்ரீல்' (YIZREEL VALLEY) பள்ளத்தாக்கு விவசாயத்தின் உச்சமாகக் காணப்பட்டது.

பச்சைவீட்டு மரக்கறிவகை, *CUCUMBER*, சர்க்கரைப் பூசனி (Water Melon), தோடை என ஏற்றுமதிப் பயிர்களால் அப்பகுதி திமிலோகப்பட்டது. அவைகளுக்கு உரமூட்டுவதே அவர்களின் கைதேர்ந்த 'சொட்டு நீர்ப் பாசன' *(DRIP IRRIGATION SYSTEM)* முறை தான். மழையுமில்லை, கிணறுமில்லை. ஆனாலங்கு பயிர் செழித்து வளர்கின்றது. பாலை நிலத்திலும் பசுமையை விதைத்த இறைவனைப் புகழ்வோம். இதில் அவதானிக்கவேண்டியதொன்று. மோயீசன் காலத்தைய 'பாலுந் தேனும் வழிந்தோடும் கானான்' என்கிற இன்றைய சீனாய் தவிர்ந்த இஸ்ரேல் அன்று யூப்பிரட்டீஸ், ரைக்கிரிஸ் நதிகளால் (இன்றைய யோர்தானின் ஒரு பகுதி உள்ளடங்களாக) செழிப்புற்றிருந்த தென்பதே சரித்திரம். காலப்போக்கில் சுதந்திரமாய்ப் பாடித்திரிந்த அந்த நாடுகளை மனிதர்கள் சொந்தங் கொண்டாடி, அவைகளுக்குக் குறுக்கே அணைகளையமைத்துத் தன் வக்கிர புத்தியைக் காட்ட, கானான் பிரதேசம் படிப்படியாய்த் தன் சோபையை இழந்தது. 'ஆர்மேனியப் படுக்கையே' *(ARMANIAN ALATEAU)* இந்நதிகளின் மூலமாகிய படியால், ஆர்மேனிய அரசு, நதிகள் மீதான தன்னாதிக்கத்தை நிலை நாட்டத் தற்போது முனைந்துள்ளது.



- தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**ந**ம்மை வழிநடத்தும் இயேசுவைப் பின்பற்றி, நம் சகோதர சகோதரிகள் எதிர்கொள்ளும் ஏழ்மையை உணர்ந்து, அதை நம்முடையதாக்கி, அதை அகற்றுவதற்கு நடைமுறை நடவடிக்கைகளை எடுப்பதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக் கப்பட்டுள்ளோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மார்ச் 05ம் தேதி தொடங்கும் தவக்காலத்துக்கென வெளியிடப்பட்டுள்ள திருத் தந்தை பிரான்சிசின் செய்தி, உலகில் மனிதர் எதிர்கொள்ளும் மூன்று விதமான வறுமை நிலைகளை விளக்கி அவற்றை அகற்றுவதில் கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் கடமையைச் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆதரவற்ற நிலை, வறுமை போன்றது அல்ல என்றும், ஆதரவற்ற நிலை என்பது, நம்பிக்கையின்றி, எதிர்நோக்கின்றி இருக்கும் வறுமையே என்றும், பொருள் சார்ந்த, நன்னெறி சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த மூன்று வகையான கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலைகள் உள்ளன என்றும் தனது தவக்காலச் செய்தியில் விளக்கியுள்ளார் திருத்தந்தை.

பொருள் சார்ந்த ஆதரவற்ற நிலையையே பொதுவாக வறுமை என்று சொல்கிறோம், இது மனித மாண்பு மறுக்கப்பட்டு, உணவு, நீர், நலவாழ்வு, வேலை, கலாசார முறையில் வளர்தல் ஆகிய அடிப்படை உரிமைகளும் தேவை களும் இல்லாமல் வாழ்தல் ஆகும், இவ்வாறு வாழ்வோருக்குத் திருஅவை உதவுகின்றதென்கிறார் திருத்தந்தை. சிலரின் வாழ்வில் அதிகாரமும் ஆடம்பர மும் பணமும் இறைவனின் இடத்தை எடுத்துக்கொள்கின்றன. இவை செல்வத்தை நியாயமாகப் பங்கிட்டுத் தர வேண்டியதன் அவசியத்தை மறக்கச் செய்து விடுகின்றன. எனவே, நீதி, சமத்துவம், எளிமை, பகிர்வு ஆகியவற்றுக்கு நம் மனதில் இடம் தர வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

தீய ஒழுக்கங்கள் மற்றும் பாவத்துக்கு அடிமையாவதை நன்னெறி சார்ந்த ஆதரவற்ற நிலை என்று கூறியுள்ள திருத்தந்தை, மது, போதைப் பொருள், சூதாட்டம், இழிபொருள் இலக்கியங்கள் போன்றவற்றுக்கு அடிமையாகியுள்ள வர்கள் குறித்த கவலையையும், இவை ஏற்படுத்தும் கடும் விளைவுகளையும் வெளிப்படுத்தி கடவுள் மட்டுமே நம்மை மீட்டு விடுவிக்க வல்லர் என்று கூறியுள் ளார். நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு அவர் உங்களுக்காக ஏழையானார் (2 கொரி. 8:9) என்ற தலைப்பில் திருத்தந்தையின் தவக்காலத்துக்கான செய்தி அமைந்துள்ளது. ●


## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரையிலிருந்து...



- நம்பிக்கைக்குரிய நல்ல நண்பர்களைக் கொண்டிருப்பது அவசியம். ஆனால், நம்மை எப்போதும் கைவிடாத இறைவனில் நம்பிக்கை கொள்வது இன்றியமையாத ஒன்று.
- பாவம் பற்றிய உணர்வை மனிதர் இழந்திருப்பதே இக்காலத்தில் பெரிய பாவமாக இருக்கின்றது.
- இயேசுவுடன் மட்டும் தொடர்புகொண்டு, திருஅவையிலிருந்து விலகி இருப்பது ஒரு கற்பனை உலகில் வாழ்வதற்குச் சமம்.
- புன்முறுவல் பூக்கத் தெரியாத கிறிஸ்தவர் இருக்க முடியும் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க இயலவில்லை: நமது நம்பிக்கைக்கு மகிழ்வுடன் சான்று பகர்வோம்.
- நம்பிக்கை என்பதை அறிவுக் கண்கள் கொண்டு மட்டும் பார்ப்பது பொருத்தமல்ல, அதனை மனக் கண்களாலும் காணவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# பாஸ்கா திருவிழா

மேரியன் பயஸ்

விழாக்களிலெல்லாம் பெருவிழாவாக அமைந்தது 'பெஸாஹ்' என அழைக்கப்பட்ட பாஸ்காப் பண்டிகையாகும். 'பாஸாஹ்' என்றால் கடந்துபோதல், காத்தல் என்று பொருள்படும். நாடோடி இடையர்களான ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் இடம்விட்டு இடம்பெயர்ந்து செல்லுமுன் தங்கள் சேமத்துக்காகவும், கால் நடைகள் பெருகவும், செழிப்பு நிலம் போய்ச் சேரவும், துர்க்குணங்கள் தூர விலகித் தீய சக்திகள் தங்களை அணுகா திருக்கவும் தங்கள் மந்தைகளுள் ஒன்றைப் பலியாக்கி, அதைப் புசித்துப் பின்னர் புது இடம் நோக்கிச் செல்வர். இது பெரும்பாலும் 'அபிப்' அல்லது 'நிசான்' எனப்பட்ட சித்திரை மாதத்தில் (மாரிகாலத்தின் முடிவு, வசந்தத்தின் ஆரம்பம்) பௌர்ணமி தினத்தன்று நடைபெறுவது வழக்கம். எனவே, இடம்பெயர்தல் அல்லது கடந்துபோதல் எனக் குறிக்கும் பெஸாஹ் அல்லது இடம்பெயரும் விழாவென இது அழைக்கப்பட்டது.

ஏறக்குறைய இதே காலத்தில், பிற்காலத்தில் உழவர் சமூகம் அறுவடைக்குப் பின் புதிதாக அறுக்கப்பட்ட கதிர்களிலிருந்து ஏழு நாட்களுக்கு அப்பம் செய்து, புளிப்புக் கலக்காமல் அவற்றை உண்டனர். புளிப்புக் கலவாமை 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்னும் கருத்துகளைக் குறிப்பதாய் அமைந்தது. 'ஹக்மசோத்' புளியாத அப்பங்களின் விழா என அழைக்கப்பட்ட இவ்விழா, கூடார விழாவுக்கு அடுத்தநாள் கொண்டாடப்பட்டது. எகிப்திய அடிமைத்தளைக்குப் பின்னர், உழவரின் புதிர்த் திருவிழாவும் (புளியாத அப்பம்) இடையரின் இடம்பெயரும் விழாவும் ஒன்றிணைக்கப்பட்டு எகிப்தில் தங்கள் முன்னோர் பட்ட அல்லல்களையும், இறைவனுடன் மோசே மூலமாக தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையையும், அவரால் தங்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்திரப் புது வாழ்வை யும், கடல் கடந்து வந்த விடுதலை யாத்திரையையும் பெருமகிழ்ச்சியுடன் நினைவு கூரும் பெரும் உற்சவமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவினையே இறை இயேசு தன் மூலமாக பரம தந்தை யூதகுலத்துக்கு மட்டுமன்றி முழு மனித குலத்துடனும் ஏற்படுத்திக்கொண்ட புதிய உடன் படிக்கையின் தொடக்கமாகவும், அன்பின் மிகுதியால் அவர் அளிக்கும் வாழ்வு தரும் திருவிருந்தாகவும் மாற்றி, இவ்விழாவிற்கு புனிதமும் புது மெருகும் அளித்தார். பரிகாரத் திருநாளன்று பலியான கடாவைப்போல், தானே மனமுவந்து உலகின் பாவங்களுக்காகவும் அதன் மீட்புக்காகவும் தன் இன்னுயிரை ஈந்ததினால் இறைவனின் செம்மறியானார்: பாஸ்கா விழாவில் வாழ்வு தரும் விருந்துமானார். ●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டனின் சில நிமிடங்கள்....



இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களிற்காக' நாம் சந்தித்தது, இயேசுசபைத் துறவி அருட்பணி போல் சற்குணநாயகம் அவர்களை. ஆனால், நாம் அவருடன் அளாவளாவியது அவரைப் பற்றியல்ல; அண்மையில் காலஞ்சென்றுவிட்ட பிரபல இயக்குனர் 'பாலுமகேந்திரா'வைப் பற்றித்தான். மட்டக்களப்பில் 'பாலுமகேந்திரா' அவர்களின் நெருங்கிய 'கூட்டாளி' என்று சொன்னால் அது 'பாதர் போல்' அவர்கள் தான் என்று 'ஜெனி' அவர்கள் எம்மிடம் கூறினார். அதை வைத்துக் கொண்டுதான் அருட்தந்தை போல் அவர்களை அணுகினோம்.

**பாதர் ... பாலுமகேந்திரா அவர்களின் இளம் பராயம் பற்றி சற்றுக் கூறுவீர்களா...? அவருடன் உங்களுக்கு எவ்வாறு நெருக்கம் ஏற்பட்டது?**

பாலுமகேந்திரா, பாலுமகேந்திரா என்று எல்லாரும் சொல்கிறார்கள். உண்மையில் அவரின் பெயர் பெனடிக்ற் பாலநாதன். அவர் என்னை 'பாலன்' என்றுதான் அழைப்பார். அவர் என்னுடன் எஸ். எஸ். சி வரை படித்தவர்.

அவருடைய தகப்பனார் பாலநாதன் அவர்கள், புனித மிக்கேல் கல்லூரியில் பெயர் பெற்ற கணித ஆசிரியர். பாலநாதன் சேர் அவர்களின் பூர்வீகம் யாழ்ப்பாணம். பாலநாதன் சேர் அவர்களின் சகலன் ஒருவர் இரட்ணய்யா என்பவர். அவரும் பிரபல்யமான எண்கணித ஆசிரியர். அத்துடன் புனித மிக்கேல் கல்லூரியின் டி.பி.யாகவும் இருந்தவர்.



வகுப்பில் நான், பெனடிக்ற் பாலநாதன், பேர்ட்டி திசவீரசிங்க, மைக்கல் பற்றிக், ஏ.எச்.வை. இராஜேந்திரம், வீனா, டட்டான் மத்தியூ ஆகியோர் மிகவும் நெருங்கிய நண்பர்கள். முதல் மூன்று பேரும் கலைப்பாடங்கள் படித்தோம். ஏனையவர்கள் விஞ்ஞான பாடங்கள் படித்தனர். இதில் பேர்ட்டி திஸ்ஸவீரசிங்க 1960களில் ஆற்றில் குளிக்கும்போது நீரில் மூழ்கி இறந்து விட்டார். இவரின் மறைவு எங்களை அதிகம் பாதித்தது. அதிலும் பெனடிக்ற் பாலநாதன் அதிகம் தாக்கப்பட்டிருந்தார்.




**திரைப்படத்துறை தொடர்பான ஆர்வம் அவரிடம் எப்படி ஏற்பட்டது?**

அவர்களின் குடும்பம், கலையார்வம் கொண்ட குடும்பம். அவரின் தம்பி வின்சன்ட் பாலநாதன் நன்றாக கிட்டார் வாசிப்பார். இதற்கிடையில் புனித. மிக்கேல் கல்லூரியில் இருந்த இயேசுசபைத் துறவிகளான அருட்பணி லோரியோ (இப்போதும் உள்ளார்), அருட்பணி டெல்மாமோ, அருட்பணி பிரிமன் ஆகியோர் புகைப்படத் துறையில் ஈடுபாடு உள்ளவர்கள். கூடைப்பந்தாட்டம் நடைபெற்றால் பாதர் லோரியோ அதைப் புகைப்படம் எடுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்லூரியில் உள்ள 'லேப்பில்' கருவியில் எங்களுக்குக் காட்டுவார். அப்படிக் கழுவும் போது, பெனடிக்ற் பாலநாதன் கூடவே இருப்பார். அப்படியே மெல்ல மெல்ல அக் கலையில் ஈடுபாடு ஏற்பட்டது. அதனால் அதுபற்றி மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவரில் உண்டானது.

**அவர் எவ்வாறு இந்தியா சென்றார்?**

இது சுவாரசியமான ஒன்று. அக்காலத்தில் மட்டக்களப்பில் நாராயணன் என்ற பிரபல பணக்காரர் இருந்தார். அவர் உணவு விடுதி யொன்றை நடாத்தி வந்தார். இந்திய தொடர்புடையவர். அவரின் மகளை பெனடிக்ற் திருமணம் செய்துகொண்டார். அந்த உறவின் உதவியினால் அவர் இந்தியா சென்று விட்டார்.


**அதன் பின்னர் பெனடிக்ற் பாலநாதனை நீங்கள் சந்தித்ததுண்டோ?**

ஆமாம்! நான் மறையியல் படிப்பிற்காக இந்தியாவின் 'பூனே'யில் உள்ள குருத்துவக் கல்லூரியில் இணைந்திருந்தேன். அதேநேரம் பெனடிக்ற் 'பூனே'யில் உள்ள திரைப்படக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். அதற்காக அவர் *'Feature film'* ஒன்றைத் தயாரிக்க வேண்டி இருந்தது. குருத்துவக் கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்பான படம் அது. இக்காலம் போன்று 'டிஜிட்டல்' தொழில்நுட்பங்கள் இல்லாத காலம். என்னை கதாநாயகனாக நடிக்கச் சொன்னார். நடித்துக் கொடுத்தேன். படம் சிறப்பாக வந்தது.

பின்னர், மலையாளத் திரையுலகில் இடம் பிடித்துக்கொண்டார். புகழ் பெற்றார்; தொடர்ந்து சென்னையில் தங்கிவிட்டார்.

**அவரது தத்ரூபமான சினிமா படைப்புகட்கு அடிப்படையாய் அமைந்தது என்ன?**

நிச்சயமாக மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிதான். அக்காலத்தில் பொதுப் பரீட்சைக்கு நாம் தோற்றுவதென்றால் இரண்டு காரியங்களில் நாம் சித்தியடைய வேண்டும். ஒன்று அனுமதிப் பரீட்சை, அடுத்தது *'Self Reflection'* (சுய பிரதிபலிப்பு). அதாவது, உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எமது படிப்பு, எமது நடத்தைகள் தொடர்பாக நாம் செய்தது தவறா, சரியா இன்னும் எவ்வாறு அதனைத் திருத்தலாம், மேம்படுத்தலாம் என்று நம்மை நாமே ஆராய்ந்து சுய அறிக்கையிடுவது தான் சுய பிரதிபலிப்பு. அதன்மூலம் எல்லா விடயங்களையும் ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் உண்டாகும். அப்படிப் பெற்ற ஆற்றல் மூலம்தான் அதீத திறமைகளை 'பாலு மகேந்திரா' என்று பெயரை மாற்றிக்கொண்ட பெனடிக்ற் பாலநாதன் பெற்றுக்கொண்டார். 'முகத்துக்குள் என்ன இருக்கு?' என்று ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல்தான் அது. கலையுணர்வுமிக்க, யதார்த்தமிக்க ஓர் அனுபவம். அவரது ஒளிப்பதிவில் பேசப்படும் 'சங்கராபரணம்' திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் சுயபிரதிபலிப்பின் சாயல் காணப்படும்.




**அவரை மீண்டும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததா?**

எழுபதுகளில் மீண்டும் உரையாடும் வாய்ப்பு ஏற்பட்டது. அதில் முதலில் அவரிடம் கேட்ட கேள்வி, "நண்பன் பேர்ட்டி திஸ்ஸவீரசிங்க தண்ணீரில் தாண்டு இறந்ததன் பிரதிபலிப்புத்தானே, 'அழியாத கோலங்கள்' திரைப்படம்?"

பக்.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலவுகாத்த கிளிகளாக .....

## ஒரு நீண்டகால அரசியல் பார்வை

இலங்கைத் தமிழர்கள் உட்பட உலகத் தமிழர்களால் ஆவலோடு எதிர் பார்க்கப்பட்டதும், பரபரப்பாகப் பேசப்பட்டதுமான ஐ.நா.சபை மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக் கப்பட்ட பிரேரணை வரைபு உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் மனச்சோர்வையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.

இலங்கைத் தமிழரின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு எத்தகைய தீர்வையோ, முன்மொழிவுகளையோ இப்பிரேரனை கொண்டுவராவிட்டாலும் இறுதி யுத்தத்தின்போது நடைபெற்ற மனிதாபிமானமற்ற கொடூரமான கொலைகளுக்கும், அழிவுகள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பாகவும் நீதியான, சர்வதேச விசாரணை ஒன்று கோரப்படும் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், மூன்றாவது முறையாகவும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டன; இல்லை தமிழ் மக்கள் ஏமாறிவிட்டார்கள்.

அதேவேளை, இப்பிரேரனை வரைபு மாற்றங்களுக்கும், திருத்தங்களுக்கும் உள்ளாகியிருப்பதாகவும், சில சொற்பதங்கள் கடுமையாக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. இக்கட்டுரை எழுதும்வரை அது தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் முழுமையாக வெளிவரவில்லை.



ஏறத்தாள முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற தமிழ் இளைஞர்களின் விடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா உட்பட எந்த ஒரு நாடும் ஆதரித்ததும் இல்லை, உதவியதும் இல்லை. மாறாக, ஆயுத உதவிகளையும், பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் இலங்கை பாதுகாப்புத் துறைக்கும் படைகளுக்குமே வழங்கிக்கொண்டிருந்தன.

இறுதி யுத்தத்தோடு தாம் நினைத்ததை சாதித்துவிட்ட இந்த நாடுகள் திடீரென்று மனம்மாறி தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர உதவுவார்கள், நீதியான விசாரணைக்கு அழுத்தங்கள் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பதெல்லாம் பேதைமை. தமது நலன்களுக்காக அவ்வப்போது இந்த நாடுகள் காட்டும் சலசலப்புகளை நம்பி கற்பனைக் கோட்டைகளைக் கட்டுவது நமது அறியாமை. எல்லாமே இழந்து எதுவுமே இயலாத நிலையில் வீழ்ந்து கிடக்கும் ஓரினம் கையில் கிடைப்பதைப் பற்றிக்கொண்டு கரையேற நினைப்பது இயல்புதான், அது தேவையுங்கூட. ஆனால், கடந்த காலங்கள் பற்றிய எந்த ஒரு விமர்சனப் பார்வையுமின்றி கற்பனைக்குள் வாழ்ந்தால் ஏமாற்றங்கள் நம்மை இமயமாய் அழுத்தவே செய்யும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இலங்கைத் தமிழர்கள் அவ்வப் போது ஆட்சியிலிருந்த அரசுகளால் ஏமாற்றப்பட்டே வந்தனர். எத்தனை போராட்டங்கள், எத்தனை பேச்சுவார்த்தைகள், எத்தனை ஒப்பந்தங்கள் எல்லாமே விழலுக் கிறைத்த நீராயின. இயலாத நிலையில்தான் சாத்வீகப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்தது. அப்போதும் அயலிலிருந்த தாய்த் தமிழக மக்கள், இந்திய அரசு ஏதோ செய்யும், எங்களைக் காப்பாற்றும் என்றே நமது மக்கள் நம்பினர். ஆனால், அரசுகளின் வஞ்சகத்தனங்களால் தமிழ் மக்கள் ஏமாற்றப் பட்டதோடு நடக்கக்கூடாத பல விடயங்கள் நடந்து, பேருக்கிருந்த உறவும் அறுந்து போனது. இலங்கைத் தமிழ் மக்கள், இந்திய அரசின் தேர்தல் மேடைகளுக்கு அவலாய்க் கிடைத்தனர். தேவையான அளவுக்குச் சப்பினார்கள் - துப்பினார்கள், இன்றும் துப்புகிறார்கள். இப்போது பந்து மேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




நாடுகளுக்குக் கிடைத்திருக்கிறது. தென்னாசிய வட்ட கையில் தமது ஆதிக்க நலன்களுக்காக நோர்வேயை அனுப்பி பேச்சுவார்த்தை என்று ஆட ஆரம்பித்தவர்கள், இன்று ஐ.நா.அவை, மனித உரிமைப் பேரவை என்று ஆடிக்கொண்டிருக்கிறார்கள், தமிழ் மக்கள் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஓர் இனம் தமது விடிவுக்கான வேலைத் திட்டத்தில் உலக அளவில் கிடைக்கக்கூடிய உதவிகள், வாய்ப்புகள் அனைத்தையும் இராஜதந்திர ரீதியாகக் கையாள்வது தேவையும் அவசியமானதுமாகும். அதற்காக நாம் உணர்ச்சிவசப்பட்டு அநாவசியக் கற்பனைகளை வளர்த்துக்கொள்ளத் தேவையில்லை. கடந்த காலங்கள், நமக்கு மிகவும் கொடுமையானது, குரூரமானது, பயங்கரமானது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதேவேளை, எந்த ஒரு நாடும், எந்த ஒரு காரணத்துக்காகவும் இலங்கை அரசைப் பகைத் துக்கொண்டு தமிழர்கள் விரும்பும் தீர்வையோ, தனி நாட்டையோ தரப்போவதில்லை. அதற்குத் துணை நிற்கப் போவதுமில்லை. நாம் இலங்கைக் குள் சகோதர இனங்களோடுதான் வாழ்ந் தாக வேண்டும். இந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஆகவே, அனைத்துலக நாடுகளின் உதவி களுக்கு முயற்சிகள் செய்கின்ற அதே வேளை, உள் நாட்டிலும் சகோதர இனங் களோடு புரிந்துணர்வை ஏற்படுத்தவும் இணக்கமான சூழலை உருவாக்கவும் காத்திரமான முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும். இதற்கான வேலைத் திட்டங் களை இலாவகமாகவும், இராஜதந்திர ரீதியாகவும் நாம் கையாள்வது அவசிய மாகும். இந்நாட்டில் எமது தனித்துவம், மொழி, இன, கலாசார, பாரம்பரியம் போன்றவற்றை காப்பதும் வளர்ப்பதும் அவசியமான அதேவேளை, இவை வெற்றி பெற வேண்டுமானால், சகோதர இனங்க ளோடு நல்லுறவை வளர்ப்பதும், நம்பிக் கையை ஏற்படுத்துவதும் மிகவும் முக்கி யமானது. வெறும் உணர்ச்சிக் கூட்டமாக வாழாது, நிகழ்கால யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு திட்டமிட்டுச் செயற்படு வதே நமது எதிர்காலத்துக்கு நல்லது.

**– மலர்வேந்தன் –**

"கண்டுபிடிச்சிட்டீங்களே....?" என்று அவர் சொன்னார்.

பிற்காலத்தில் 'ஷோபா' வின் மரணம் அவரைப் பாதித்திருந்தது.

**மட்டக்களப்பான், இலங்கையன் போன்ற அடையாளங்களை அவர் தவிர்த்துவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளதே, அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன ?**

அது உண்மைதான்! கேரளாவில் அறிமுக மாகி சென்னையில் வாழ்ந்தவர் அவர். தனது உண்மையான சில அடையாளங்களை மறைத்து அல்லது மறந்துவிட்டார். அவர் கத்தோலிக்கர் என்று குறிப்பிட்டதாகவோ, இலங்கையர் என்று இனங்காட்டிக் கொண்ட தாகவோ எனக்குத் தெரியவில்லை. இந்திய ராக, இந்துவாகத் தன்னை உருவகப்படுத் திக்கொண்டார். அதற்காக அவர் எம்மவர் என்பதனை நாம் மறக்கலாமா? அதனை ஆவணப்படுத்த வேண்டும்.

**பாடசாலைக் காலத்தில் அவருடன் சேர்ந்து செய்த குறும்புகள் ஏதும் உண்டா?**

நிறைய உண்டு. முன்னர், 'வண்ணத்திப்பூச்சி' பூங்கா இருந்த இடத்தில் நிறைய மாமரங்கள் காய்த்து இருந்தன. வகுப்பை 'கட்' பண்ணி விட்டு மாங்காய் பிடுங்கி, பாதர்மாரிடம் பிடி பட்டு ஓடி, முள்ளுக்கம்பி வேலியில கொழுவுப்பட்டு அடிவாங்கியது இன்னும் மறக்க முடியாது. (பலமாகச் சிரிக்கிறார்).


**ஈற்றில் தொண்டன் சார்பில் அடிகளாருக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# சுடலை ஞானம்

குறுங்கதை – 3



செத்த வீட்டுக் கிருத்தியமெல்லாம் முடிஞ்சு பிரேதத்தைத் தூக்கியபோது, மனைவியும் மகளும் சூழ்ந்து நின்ற பெண்களும் பெருங்குரலெடுத்து "ஐயோ ...... ஐயோ......" என்று ஒப்பாரி வைக்க, தெற்குப் புறமாக வெட்டிய வேலியூடே 'முருகேசர்' என்ற நாமம் மாறி 'சவம்' என்ற பொதுப் பெயருடன், தென்னங்கீற்றில் பின்னிய பன்னாங்குப் பாடையில் ஆரோகணித்தார் முருகேசர், சடலமாக.

உறவுகள் அனைத்தையும் துறந்து, சொத்துப் பத்தெல்லாம் மறந்து வெறுங்கையனாகப் புறப்பட்ட மரித்த முருகேசரோடு 'வீடு வரை உறவு: வீதிவரை மனைவி: காடுவரை பிள்ளை...." என்றவாறு ஊர்வலம் மெல்ல நகர்ந்தது.



"பெற்றோமாக்சுக்கு மட்டும் துடக்கில்லையே.... அதையும் கழுவத்தானே வேணும்!"

சுடலையை அணமித்ததும், முருகேசரின் ஒரே மகனும், மூத்தவனுமாகிய விடலைப் பையன் நீர் நிறைந்த கொள்ளிப் பானை இடது தோளிலும் எரிகொள்ளி மறுகையிலுமாக முன் நகர்ந்து மும்முறை சடலத்தைச் சுற்றி வலம்வர, நாவிதன், கொள்ளிக் குடத்தில் கத்தியால் மெல்லத் தட்டியவாறு பின்தொடர, வலம் வந்த பிள்ளை பெரியவர்களின் கட்டளைப்படி இடது முட்டுக்காலை மடக்கிக் குந்தி பின்புறமாக கொள்ளிக் கட்டையை நீட்டி அப்பனின் சிதைமேல் செருகும்போது விம்மியழுதான்.

"தம்பி, காலைத் தொட்டு விழுந்து வணங்கிவிட்டு திரும்பிப் பாராமல் போ ராசா" என்றொருவர், பையனைப் பார்த்து கண்கலங்கிய மனிதர்,

"யாராவது தம்பியைப் பிடிச்சுக்கொண்டு போங்கோ..." என்றார்.

சடலம் பற்றியெரியத் தொடங்கியதும் கூடநின்ற சிலரும் திரும்பிப் போக மீண்டுமோர் கட்டளை பிறந்தது,

"சண்முகத்தோடை ரெண்டுபேர் நிற்க, மற்றவையெல்லாம் போகலாம்"

இருள் கௌவிய நேரம், பெருங் 'குடி' மகனொருவன் கூச்சலிட்டான்,

"பெற்றோமாக்சுக்கு மட்டும் துடக்கில்லையே.... அதையும் கழுவத்தானே வேணும்!"

இதையெல்லாம் ரசிக்கும் திராணியற்ற முருகேசரின் சடலம் தன்பாட்டில் வெந்து கொண்டிருந்தது.

– வீக்கேயெம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கும்ரான் வாசிகள்

அருட்திரு S.A.I. மத்தியூ



யோர்தான் நதி ஒரு வரலாற்று நதி. அது சாக்கடலோடு கலக்கின்ற இடத்திற்குச் சற்று மேலே கும்ரான் (Qumran) பாலைவெளி; பல மலைக் குன்றுகள்; அந்த மலைக் குன்றுகளிலே பல சுரங்கங்கள் உண்டு. இவ் விடத்திற்கு இம்ரான் (Imran) என்ற பெயரும் உண்டு. இம்ரான் என்பது மோசேயின் தந்தையின் மற்றைய பெயர். இம்ரான் மன்னரது பட்டத்துப் பெயர் 4ம் அமனோடேப் என்பதாகும்.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கும்ரான் பிரசித்தி பெறலாயிற்று. இதற்குக் காரணம் அங்கிருந்த பல மலைக் குகைகளில் மட்சாடிகளில் பத்திரமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஓலைச் சுவடிகளில் (Papyrus) எழுதப்பட்டிருந்த நூல்களாகும். இவை, கி.மு 200-கி.பி. 50 வரையான காலப்பகுதி யைச் சேர்ந்தவையாம். இதேபோன்று எகிப்து நாட்டின் வடகரையில் அமைந்திருந்த நக்ஹமாதி (Nag-Hammadi) ஓலைச்சுருள் கண்டுபிடிப்புகளும் கிறிஸ்தவத்தின் முன் னைய, ஆரம்ப சிந்தனைகளின் தொகுப்புகளாக இருந் ததை அறிஞர்கள் பெரும் ஆய்வுகளின் பின்னர் கண்டு பிடித்துள்ளனர்.

இங்கு நாம், இரு சாராரான மக்களைக் காண்கின் றோம். கும்ரான் வாசிகள் எஸென்ஸ் (Essense) எனப்பட்ட னர். இவர்கள் பல பெரிய விரதங்களுடன் சமய அனுட்டா னங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமய நெறியில் ஈடுபட்டனர். கி.மு. 06ம் நூற்றாண்டில் நெபுகட்னேசர் என்ற பபிலோனிய மன்னனின் படையெடுப்புகளின்போது பெருந் திரளான யூதர்கள் பபிலோனியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டும் சின்ன ஆசியா, அரேபியா, எகிப்து, அலெக்ஸாண் ரியா பட்டணம், கிரேக்க மசிடோனியாவிலும் சிறு தொகை யினர் உரோமிலும் குடியேறினர். இவர்களில் எஸென்ஸ் என்றவர்கள் கும்ரான் பகுதியிலும் குடியேறினர். இவர் கள் யெருசலேமிலிருந்த யூதக் குருக்களோடு ஒத்து வரவில்லை. யெருசலேமிய யூத குருக்கள் முதலில் கிரேக்க ஆட்சியையும் பின்னர் உரோம ஆட்சியையும் ஏற்றுக்கொண்டவர்களாகவும் அவர்களது மேலாதிக் கத்தை ஏற்றுக்கொண்டவர்களாகவும் இருந்தனர். அவர்களது சமய அனுட்டானத்தையும் ஏற்றுக் கொண்டனர். இதனால், இரு சாராரும் பகைமை உணர்ச்சியுடன் வாழ்ந்தார்கள். 1947-1965ற்கு மிடைப்பட்ட காலப் பகுதியில் கண்டுபிடிக் கப் பட்ட கும்ரான் சுவடிக ளில் பல இசையாஸ் தீர்க்கதரிசி யின் நூல்க ளாகும். இந் நூல்கள் பபிலோனியாவில் யூதர்கள் அடிமை களாக இருந்த காலத்தில் தோன்றிய பெருந் தீர்க்கதரிசியா கிய இசையாசினால் எழுதப்பட்டவை. மேலும், இதிலுள்ள தீர்க்கதரிசனங் களைப் போற்றி வந்ததுடன் தமக்கு எதிர்காலத்தில் ஒரு மெசியா வருவார் என்பதை யும் உணர்ந்திருந்தனர். யெருசலேம் தேவாலயத்தி னுடையதைப் போன்ற வரை படமும் கும்ரான் கண்டுபிடிப் புகளில் காணப்பட்டது. தமக்குச் சுதந்திரம் கிடைக்கு மென்று அவர்கள் நம்பினர். சிலர் அதற்காகவே உழைத் தனர்.

வன்முறையின் மூலமும் கத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈட்டி மூலமும் உரோமர்களை வெற்றி கொள்ளலாம் என்ற தீவிரவாதக் குழு எழுந்தது. அது யூதாஸ் என்பவனின் தலைமையில் இயங்கியது. இந்த வம்சத்தில் வந்தவனே யூதாஸ் ஸ்காரியோத் ஆவான்.

யூதேயாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட யூதர்கள் மேற்குறித்தவாறு பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்கு பெரும் செல்வந்தர்கள் ஆனார்கள். இவர்களை வரலாறு டயஸ்போறா (Diasphora -Dispersion) எனக் கூறுகின்றது. இவர்கள் எங்கிருந்தபோதும் இவர்களது சொந்த இடம் யூதேயாவாகும். தாம் தங்கியிருந்த நாடுகளில் இருந்து யெருசலேம் தேவாலயத்திற்கு வந்து காணிக்கை செலுத்தியும் ஆலய பராமரிப்புக்கான நிதியுதவிகளையும் செய்து வந்தனர். இதேபோன்று கும்ரான் களஞ்சியத்திற்கும் பணம் பெறப்பட்டது. அது பெருந்தொகையான பணம். இயேசுவின் காலத்தில் அப்பணத்திற்கு பொறுப்பாளனாக இருந்தவன் யூதாஸ் ஸ்காரியோத் ஆவான். அந்தப் பணம் கும்ரான் குன்றுகளில் - குகைகளில் ஒளித்துவைக்கப்பட்டிருந்தது. இதனை நாம் நான்கு நற்செய்திகளிலும் ஆங்காங்கே காணலாம். "இவன் ஒரு கள்வன்" என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டே பிலாத்து இவனை தன்வசம் ஈர்த்துக்கொண்டான். ■



# அரசனின் நோய்



மற்றில்டா இராஜேந்திரம்

ஹிப்போகிரட்ஸ் பற்றி நம்மில் பலர் அறிந்துள்ளோம். இவர் ஞானம் நிறைந்த ஒரு வைத்தியர். தம் நோயாளிகளை அணுகி, அவர்கள் சொல்வதைக் கேட்டுக் குணமாக்கிய இவரது பணி வாழ்வில் பல சுவாரஷ்யமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. அவற்றில் ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்:




ஒரு தடவை மசிடோனிய மன்னன் பேர்டிக்காசின் நோயைக் குணமாக்க வருமாறு அழைக்கப்பட்டார் ஹிப்போகிரட்ஸ். ஏற்கனவே அங்கிருந்த அரசவை வைத்தியரால் அரசரது நோய்க்கான காரணத்தை அறிய முடியாமற் போயிற்று. ஹிப்போகிரட்ஸ் சென்று அரசரைச் சந்தித்தார். அவரைச் சுதந்திரமாகப் பேச வைத்தார். அவர் பேசுவதைக் கவனமுடன் செவிசாய்த்துக் கொண்டிருந்தார். அவரது கடந்தகாலம் பற்றிக் கேட்டார். அவரது கடந்தகாலக் கனவுகள் பற்றியெல்லாம் பேச்செழுந்தது. இந்த வைத்திய ஆலோசனையின் முடிவில் ஹிப்போகிரட்சுக்கு ஒரு விடயம் தெளிவானது. அரசர் பேர்டிக்காசின் நோய்க்குக் காரணம், அவரது இதயங் கவர்ந்த சிறுவயதுத் தோழி பிலாவின் மீது அவருக்கிருந்த காதலே என்பது.... ■ ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீட்டு மருத்துவம்


## அச்சுறுத்தும் ஆட்கொல்லியாம் புற்றுநோய்




உலக மக்கள் அனைவரையும் கிலி கொள்ளச் செய்யும் ஒரு நோயாக புற்றுநோய் இருந்து வருகின்றது. மருத்துவ உலகம் எவ்வளவோ முன்னேறி விட்டதனால் பெருமைப்பட்டுக் கொண்டாலும் புற்றுநோயை முற்றாக அடித்து விரட்டும் வழி முறைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது வருவதற்கான காரணத்தையும் தெளிவாக வரையறை செய்யவும் முடியவில்லை. அதனால் ஏற்படும் உயிரிழப்புகளையும், வேதனைகளையும் காணமுடிகிறது.



இலங்கையில் வடக்கு கிழக்கில்தான் புற்றுநோய் அதிகம் காணப்படுவதாகவும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டந்தான் அதிக பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஒரு காலத்தில் வயதான ஒருசிலரிடம் காணப்பட்ட இந்நோய் இன்று இளவயதினர் மற்றும் குழந்தைகளையும் விட்டுவைப்பதாக இல்லை. இது தொடர்பான அறிவித்தல்களோ, விழிப்புணர்வோ பரந்த அளவில் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை.



இயற்கையான வாழ்க்கை முறையைத் தொலைத்து நாகரீகம் என்ற பெயரால் நாம் வாழும் நவீன வாழ்க்கை முறை, பாவிக்கும், பொருட்கள், உண்ணும் உணவுகள் எல்லாமே நஞ்சாகிப் போனதுதான் புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் நம்மைப் பிடித்துக் கொள்ளக் காரணம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



நாம் பாவிக்கும் களிம்புகள், கொசுக்கடிக்காக எரிக்கும் வத்திகள், திரவங்கள் அனைத்தும் இரசாயனச் சேர்க்கை கொண்டவைகளே. எல்லாமே பிளாஸ்டிக் மயமாகிவிட்ட உலகில் பிளாஸ்டிக்குகளிலிருந்து கசிகின்ற டயாக்சின்கள், உணவுப் பொருட்களில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் உரங்கள், விசிறப்படும் இரசாயனங்கள், நவீன எலக்ரோனிக் கருவிகளிலிருந்து வெளியேற்றப்படும் நுண்ணிய கதிர்வீச்சுகள் அனைத்தும் இந்த உலகையும், நம்மையும், சூழலையும் நச்சுக்காடாக்கி வருகின்றன.



புற்றுநோய் வராது காத்துக்கொள்வதற்கு நமது உணவுப் பழக்கங்கள் முக்கியமானவை என்று கருதப்படுகிறது! நாம் பாவிக்கும் மஞ்சளில் உள்ள சத்துகள் நமது புரதக் கூட்டைச் சீரமைத்து நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கச் செய்கிறது. ஏறக்குறைய 250 வகையான நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றல் மஞ்சளுக்கு உண்டாம். அத்துடன் நாம் சமையலில் பாவிக்கும் நறுமணப் பொருட்களுக்கும் புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் உண்டு. கறிவேப்பிலை, கறுவாப் பட்டை, இஞ்சி, பூண்டு, வெந்தயம், ஏலக்காய், சாதிக்காய் என நாம் உணவில் பாவிக்கும் மணமூட்டிகள் அத்தனையும் நோய்த் தடுப்புக் காரணிகளாகச் செயல்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. அவற்றை அடிக்கடி முடிந்தளவு உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தவேண்டும்.

■ ஆனந்த சித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலாபூஷணம்



**தொ**ண்டன் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. வயலற் சந்திரசேகரம் பல்துறைக் கலைஞர் ஆவார். சிறுவயது முதல் இலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வங்கொண்டிருந்தார். கவிதை, கட்டுரை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், நாடகம் என்பவற்றை எழுதுவதில் வல்லவர். சிறந்த நடிகராகவும், ஓவியராகவும், ஒப்பனையாளராகவும், அறிவிப்பாளராகவும், பாடகராகவும் திகழ்ந்தவர். சிங்களமொழித் தேர்ச்சி பெற்றவர். இவர் B.com, Dip-in-Ed, M.Com (Hons) பட்டங்களையும் பெற்றவர்.

### இலக்கியத்துறை, நாடகத்துறை பங்களிப்பு:


'சாணக்கியன்' வெளியீட்டாளரும், ஆசிரியரும், "எண் சோதிட ஜோதி", "வாழ்க்கையை வளமாக்க வழி என்ன?" ஆகிய நூல்களையும், "கவின்கவி", "உளி" ஆகிய கவிதைத் தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் நூற்றுக்கும் மேற்பட்டன வாகும். இவரது ஆக்கங்கள் தினக்குரல், தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. பல நாடகங்களை எழுதி இயக்கி அரங்கேற்றி தேசிய மட்டத்தில் பல விருதுகளை எடுத்துள்ளார். சிறந்த வில்லிசையாளர், பல்வேறு துறைகளிலும் பல்வேறு விருதுகளைப் பெற்ற இவர், இந்தியாவில் அமைந்துள்ள புனித காமல் சபையினரால் "சிறந்த ஆசிரியர்க்கான விருதையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொண்டன் குடும்பத்தினர் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறார்கள்



இயற்கையான உரங்களைப் பாவித்து விளைவிக்கப்படும் காய்கறிகள், பழங்கள், தீட்டப்படாத தானியங்கள் போன்றவற்றை முடிந்தவரை நாளாந்த உணவினிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் காணிகள் பெரிதாக இருந்தன. வீட்டுக்கு வீடு, அவரைப் பந்தலும், பாவற்காய், புடலங்காய், பீர்க்கங்காய் பந்தல்களும் இருந்தன. பப்பாளியும், வாழையும், கொய்யாவும் வீடுகளிலேயே கிடைத்தன. சுவைக்கும் ஆரோக்கியத்துக்கும் குறையிருக்கவில்லை. இன்று மக்கள் அடர்த்தியும் அதிகரித்து, வாழ்க்கை முறையும் மாறி, காணி



களும் குறுகி, மருந்தே உணவாகிப்போனது; ஆயுளும் குறுகிப்போனது. ஆனால், நாம் நமது வாழ்க்கை முறையை திட்டமிட்டு அமைத்துக் கொண்டால் நவீன இரசாயன உணவுகளை விடுத்து, எளிமையான, இயற்கையான உணவு முறைகளை முடிந்தளவு மீண்டும் பழக்கப்படுத்திக்கொண்டால், சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகளையும், விளையாட்டு, உடற்பயிற்சி, யோகா, மூச்சுப்பயிற்சி போன்ற கலைகளையும் நம தாக்கிக் கொண்டால் கொடிய நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றலை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்.

"நமது ஆரோக்கியம் நமது கையில்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**சித்திரை 02ம் திகதி : புனித பிரான்சிஸ் போலா**



பிரான்சிஸ் 1416ம் வருடம் கலப்றியாவிலிருந்த ஒரு சிறிய நகரமான போலாவில் பிறந்தார். இவர் பிறந்தது வறிய குடும்பமாக இருந்தாலும் நற்பண்புகள் நிறைந்தது. அதே மாகாணத்தில் இருந்த புனித மார்க் எனுமிடத்தில் அமைந்திருந்த பிரான்சிஸ்கன் கன்னியரில்லத்தில் வாசிக்கக் கற்றுக்கொண்டார். அவர் ஒரு வருடத்தை அங்கு கழித்த பின் 1432ம் வருடத்தில் போலாவிலிருந்து அரை மைல் தூரம் சென்று தனிமையாக வாழத் தொடங்கினார். இருபது வயதை அடையுமுன்பே, இன்னும் இருவர் இவருடைய பக்திமிகு பயிற்சிகளைத் தாமும் அனுசரிக்க விரும்பி இணைந்து கொண்டனர். சிறிது காலத்தின் பின் அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அயலில் வாழ்ந்தவர்கள் அவர்கள் வசிக்க மூன்று அறைகளையும் ஒரு கோவிலையும் கட்டிக்கொடுத்தனர். அப்பங்குத் தந்தை வந்து அவர்களுக்காக அங்கு திருப்பலியை ஒப்புக்கொடுத்துச் சென்றார். இதுவே, 1436ம் வருடம் மினிம்ஸ் சபை உருவாகக் காரணமானது எனலாம். இச்சபை 1474ம் வருடத்தில் பரிசுத்த பாப்பரசர் 4ம் சிக்ஸ்டசினால் அங்கீகரிக்கப்பட்டது. இதன் பொது மேலாளராகப் பிரான்சிஸ் நியமிக்கப்பட்டார். 1454ல் முதலாவது மடாலயம் கட்டப்பட்டது. மேலும் பலர் இதில் இணைந்துகொண்டனர். 1482ம் வருடத்தில் 11ம் லூயி மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, பாப்பரசரின் கட்டளையை ஏற்றுப் பிரான்ஸ் நாடு சென்ற இவர் 1483ம் வருடம் மன்னன் இறப்பதற்கு முன் பிரான்சில் தன் சபையை நிறுவினார். இதன் ஆதரவாளர்களாக 8ம் சார்ள்ஸ், 12ம் லூயிஸ் ஆகிய மன்னர்கள் திகழ்ந்தனர். தனது நீண்ட தவ வாழ்வு முடிவுக்கு வந்ததை உணர்ந்தபோது, தனது வாழ்வின் இறுதி மூன்று மாதங்களையும் தான் ஆரம்பத்தில் வாழ்ந்த அறையிலேயே இருந்து மரித்தார். 1508ம் வருடம் குருத்தோலை ஞாயிறு தினத்தன்று நோய்வாய்ப்பட்டுச் சில தினங்களிலேயே தனது 92வது வயதிலே இறையடி சேர்ந்தார்.

**சித்திரை 04ம் திகதி : செவில்லி நாட்டின் புனித இசிடோர்**

இசிடோர் ஸ்பெயின் நாட்டு கார்ட்டகெனாவில் வாழ்ந்த நல்லொழுக்கமுள்ள, புகழ்பெற்ற குடும்பமொன்றில் செவெரினஸ், தியோடரா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவரது சகோதரர்கள் லீன்டரும், பல்கென்ஷியசும் பிற்காலத்தில் ஆயர்களாயினர். இவரது சகோதரி புளோரன்டினாவாகும். இவர்கள் மூவரது பெயர்களும் புனிதர்களின் பட்டியலில் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இசிடோர் இளமையிலேயே திருச்சபையின் பணிக்கெனத் தன்னை அர்ப்பணித்துத் தன் நல்லொழுக்கத்தால் இரகசியமாகப் பணிவாழ்வுக்கு ஆயத்தப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கொண்டார். தான் ஆரம்பிக்கப்போகும் சபைக்கான அனைத்து விடயங்களையும் கற்றுக்கொண்டார். ஏரியன் பேதகக் கருத்துகளின் தாக்கத்திலிருந்து விசிகோத்சினை மனமாற்றம் பெறச் செய்தமைக்குச் செவில்லி அதிமேற்றிராணியாரான இவரது சகோதரர் லீண்டருக்கு உதவியாக இருந்தார். 600ம் ஆண்டில் இது நடைபெற்றது. இவ்வாண்டில் அவர் மரிக்கும்போது ஸ்பானிய திருச்சபையின் செவில்லியில் உருவாக்கிய பல சபைகளைத் தமது வழிநடத்துதலினால் ஒழுக்கமுடையனவாக்கி நிலைநிறுத்தினார். 619ல் கிரகறி எனும் சிரியாவின் ஒரு டியூசியன் ஆயரை மனமாற்றம் பெறச் செய்தார். இதற்குமுன் 610ம் வருடத்தில் டொலடோவின் அதிமேற்றிராணியார் அங்கு கூடிய சபையிலே இவரை முழு ஸ்பெயினுக்கும் தலைவராகப் பிரகடனம் செய்தார். 633ம் வருடத்தில் கூடிய டொலடோ சபைக்குத் தலைமை தாங்கினார். இச்சபை ஸ்பெயின் நாட்டுச் சபைகளனைத்தின் பாராட்டையும் பெற்றது. அவ்வேளையில் டொலடோ ஸ்பெயினின் தலைநகராகவும், விசிக்கோதிக் அரசர்களின் மாளிகை அமைந்த இடமாகவும் இருந்தது. இசிடோர் பிரமாண்டமான எழுத்தாளர். இவர் உருவாக்கிய விஞ்ஞானத்தின் முழு வட்ட வேலைத் திட்டமானது இவரது பரந்த நூலறிவைக் காட்டுகிறது. இது ஆரம்பகாலக் கலைக்களஞ்சியங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலத்தீன், கிரேக்கம், எபிரேய மொழிகளை அறிந்திருந்தார். இவர் திருச்சபைப் பணிகளை 37 வருடங்களாகத் தொடர்ந்தார். வாழ்வின் கடைசி 6 மாதங்களிலும் எப்போதுமில்லாதவாறு அளப்பரிய பணிகளைச் செய்தார். இறுதியில் ஆலயம் சென்று திவ்விய நற்கருணை பெற்றார். தனது கடனாளிகளை மன்னித்தார். தன்னிடமிருந்த பணத்தை ஏழைகளுக்கு வழங்கினார். பின் இல்லத்திற்குத் திரும்பினார். 4 நாட்களின் பின் 636ல் இறைபதமெய்தினார். ■ ■

## உலகத் தொடர்பு நாளுக்கென திருத்தந்தை வழங்கியுள்ள செய்தி

நம் மத்தியில் பெருகியுள்ள தொடர்புகள் மற்றும் பயண வசதிகள் நம் உலகை மிகவும் சிறிதாக மாற்றி, நம்மை நெருங்கி வர வைத்துள்ளது என்ற வார்த்தைகளுடன் திருத்தந்தை பிரான்சிஸ் உலகத் தொடர்பு நாளுக்கான செய்தியை வழங்கியுள்ளார்.



ஜூன் முதல் திகதி ஞாயிறன்று திருஅவை கொண்டாடவிருக்கும் 48வது உலகத் தொடர்பு நாளுக்கென திருத்தந்தை வழங்கியுள்ள இச்செய்தியில், கருவிகளின் உதவியாலும், உலகமயமாக்கல் என்ற போக்கினாலும் இவ்வுலகம் நெருங்கி வருவது போல் தோன்றினாலும், செல்வர், வறியோர் ஆகிய இரு பிரிவினருக்கிடையே இணைக்க முடியாத ஆழமான பிரிவு உருவாகியுள்ளது என்பதையும் நாம் மறுக்க முடியாது என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

எண்ணிப் பார்க்க இயலாத அளவுக்குக் குறுகிய காலத்தில் தகவல்கள் உலகெங்கும் பரிமாறப்படும் இவ்வேளையில், நம்மிடையே உரையாடல்கள் குறைந்து வருவதும் வளர்ந்து வருகிறது என்ற எச்சரிக்கையைத் திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் அச்சமின்றி 'டிஜிட்டல்' உலகின் குடிமக்களாக மாறுவோம் என்ற அழைப்பை தன் செய்தியின் வழியாக விடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ், தொடர்பு உலகம் நமக்கு முன்வைத்துள்ள அனைத்துச் சவால்களையும் திறமையுடன் ஏற்று, இறைவனின் அழகை அனைவரோடும் பகிர்ந்து கொள்வோம் என்ற கருத்துடன் தன் செய்தியை நிறைவு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

பரிசுப் போட்டி

முடிவுத் திகதி 30.04.2014

# விவிலியம் கற்போம் – 130

யோசுவா : 9ம் அதிகாரம் 1–27 திருவசனங்கள்

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

யோர்தானுக்கு இப்பக்க மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் பெருங்கடலின் கரை முழுவதிலும் லெபனோனின் முன்பக்கம் வரை இருந்த மன்னர்கள் அனைவரும் இத்தியர், எமோரியர், கானானியர், இவ்வியர், எபூசியர் ஆகியோரும் இதைப்பற்றிக் கேள்வியுற்றனர். ...................... இஸ்ரயேலருடனும் போர்தொடுக்க ஒன்றுகூடினர். கிபயோன் மக்கள் எரிக்கோவிற்கும் ஆயிக்கும் யோசுவா செய்ததைக் கேள்வியுற்றனர். கிபயோன் மக்கள் தூதர்போல் தந்திரமாகச் சென்றனர். கழுதைகளின் மீது கிழிந்த மூட்டைகளையும், பழைய இரசத் தோற்பைகளையும் ஏற்றிக்கொண்டு பழைய காலணிகளையும், பழைய ஆடைகளையும் அணிந்து ...................... அப்பங்களை உணவாகக் கொண்டு சென்றனர். அவர்கள் கில்காலில் பாளையம் இறங்கியிருந்த யோசுவாவிடம் சென்றனர். "நாங்கள் தொலை நாட்டிலிருந்து வருகிறோம். எங்களோடு உடன்படிக்கை செய்யுங்கள்" என்றனர். அவர்கள் யோசுவாவிடம் "நாங்கள் உங்கள் பணியாளர்கள்" என்றனர். யோசுவா அவர்களிடம் "நீங்கள் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்?" எனக் கேட்க, அவர்கள் "மிகத் தொலைவிலுள்ள நாட்டிலிருந்து உங்கள் ...................... பெயரால் உங்கள் பணியாளர்கள் வந்திருக்கிறார்கள். ஏனெனில், அவர் பெயரையும், எகிப்து நாட்டில் செய்தவற்றையும் கேள்விப்பட்டோம். யோர்தானுக்கு அப்பால் வாழ்ந்த எஸ்போன் மன்னன் சீகோன், அஸ்தரோத்திலிருந்த பாசான் மன்னன் ஒகு ஆகிய இரு ...................... மன்னர்கட்கும் அவர் என்ன செய்தார் எனவும் அறிந்தோம். எங்கள் ஊர் மக்கள், "உங்கள் கைகளில் உணவுடன் அவர்களைச் சந்திக்கச் செல்லுங்கள். அவர்களிடம் நீங்கள் நாங்கள் உங்கள் பணியாளர்கள், இப்போது எங்களுடன் உடன்படிக்கை செய்யுங்கள் எனக் கூறுங்கள்" என்றனர். நாம் புறப்படும்போது எடுத்து வந்த ...................... சூடாக இருந்தது. இப்போது காய்ந்துவிட்டது. திராட்சை இரசத் தோற்பைகள் கிழிந்துவிட்டன. எம் ஆடைகள் மிதியடிகள் கிழிந்துவிட்டன" என்றனர். இஸ்ரயேலர் அவர்களது உணவை எடுத்துக்கொண்டனர். ஆண்டவரது வார்த்தையை நாடவில்லை. யோசுவா ...................... மக்களை ஏற்று உடன்படிக்கை செய்து வாழவிட்டார். சபைத்தலைவர்கள் அவர்களுக்கு ஆணையிட்டு வாக்களித்தனர். மூன்றாம்நாள் இஸ்ராயேல் மக்கள் அவர்கள் தங்களுக்கு அருகில் உள்ளவர்கள் என்றும், அடுத்து வாழ்பவர்கள் என்றும் கேள்வியுற்றனர். இஸ்ரயேலர் புறப்பட்டு அவர்கள் நகருக்கு வந்தனர். கிபயோன் ...................... பெயரோத்து, கிரியத்து எயாரிம் ஆகியவையே அந்நகர்கள். இஸ்ரயேலர் அவர்களைக் கொல்லவில்லை. ஏனெனில், சபைத் தலைவர்கள் அவர்களுக்கு இஸ்ரயேலரின் ஆண்டவர் பெயரால் ஆணையிட்டு வாக்களித்திருந்தார்கள். சபை, தலைவர்களுக்கு எதிராக முணுமுணுத்தது. எல்லாத் தலைவர்களும் அனைவரிடமும் "ஆண்டவரின் பெயரால் ...................... அளித்துவிட்டோம். நாங்கள் அவர்களுக்குத் தீங்கிழைக்க முடியாது. நாம் அவர்களை வாழவிடுவோம். ஆண்டவரின் சினம் நம்மீது விழாதிருக்கும்" என்றனர். தலைவர்கள், "அவர்கள் வாழட்டும். ஆனால், சபை முழுவதற்கும் அவர்கள் மரம் வெட்டுபவராகவும், தண்ணீர் எடுப்பவராகவும் இருக்கட்டும்" என்று கூறினர். யோசுவா அவர்களை அழைத்து "நீங்கள் எமக்கு மிக ...................... வாழ்கிறீர்களே, பின் 'நாம் வெகு தொலைவில் வாழ்பவர்கள்' என ஏமாற்றினீர்கள். இப்போது நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். மரம் வெட்டுபவராகவும், தண்ணீர் எடுப்பவராகவும் இருப்பீர்கள்" என்றார். அதற்கு அவர்கள் "அனைவரையும் அழித்துவிடுவீர்கள் என்று அஞ்சி இவ்வாறு செய்தோம். நாம் இதோ உங்கள் கையில் உள்ளோம். எதுவாயினும் செய்யுங்கள்" என்றனர். அவர் இஸ்ரயேலரின் கைகளிலிருந்து அவர்களை விடுவித்தார். அவர்களுக்குக் கூறியவற்றைச் செய்வித்தனர். இன்றுவரை குறித்த இடத்தில் உள்ளனர்.

**விடைகள்:** **இவ்வியரிடம், அப்பம், கிபயோன், கெபிரா, யோசுவாவுடனும், கடவுளின், அருகில், வாக்குறுதி, எமோரிய, காய்ந்த.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 130

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

*1.* பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
(திரிகடுகம் - நற்றிணை - பட்டினப்பாலை)

*2.* ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள பிரதான அமைப்புகள்
(ஆறு - எட்டு - பத்து)

*3.* புவி கோளவடிவானது என முதலில் கூறியவர்
(பைதகரஸ் - கலிலியோ - கெப்ளர்)

*4.* இலங்கையில் திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு
*(1980 - 1975 - 1990)*

*5.* இரத்த வங்கிகள் அதிகம் உள்ள நாடு
(இந்தியா - சீனா - அமெரிக்கா)

*6.* 'பொறுத்தார் ........................'
(பூமியாள்வார் - பொங்கி எழுவார் - வீழ்ந்து போவார்)

பெயர் : ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 130**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 128 விடைகள்

சினம், மூவாயிரம், முப்பத்தாறு, எமோரியர், அழிவுக்குரியவர்கள், யூதாகுலம், வெள்ளியையும், தங்கக் கட்டி, கல்லால்.

## அறிவை வளர்ப்போம் - 128 விடைகள்

1. 1796
2. லுணுவில
3. ஐன்ஸ்டீன்
4. மீன்
5. மூட மூட ரோகம்
6. அத்தனை

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதாததால் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோருள் தெரிவான நால்வருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத் தொகை 200/=

- எரிக் பிறவீனா இரவிச்சந்திரன்
  148, 2ம் குறுக்கு வீதி,
  குமாரபுரம்,
  மட்டக்களப்பு.
- அ.ஜே. கைலேஸ்
  35/3, பெரிய உப்போடை,
  மட்டக்களப்பு.
- ஜோ. கீர்த்திகா
  பதுளை வீதி,
  செங்கலடி.
- ஜெ. தரணியா
  06ம் குறுக்கு,
  சர்வோதய வீதி,
  சத்துருக்கொண்டான்.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 76 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  எஸ். இரதிப்பிரியா,
  இல. 65, திருச்செந்தூர் வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  பி. சதுர்சிகா,
  பிரதான வீதி,
  திருக்கோவில் - 04.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  இரா. டிதுர்ஷன்
  22/4 A, மூன்றாம் ஒழுங்கை,
  அல்விஸ் ரவுண்,
  வத்தளை.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காற்றில் கலந்து வரும் .....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்

ஏப்ரல் – 2014

**தவக்கால புனித வார சிறப்பு நிகழ்ச்சிகள் – தமிழ்**

நாள் : 04 – வெள்ளிக்கிழமை நேரம் : 07.30 மணி
புதிய உலகம்
சிந்தனைத் தியானம் – "நான் சாக நான் வாழ்வேன்"
வழங்குபவர் : அருள்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ்

நாள் : 11 – வெள்ளிக்கிழமை நேரம் : 07.30 மணி
புதிய உலகம்
சிந்தனைத் தியானம் – "அன்புறவே ஆன்மீகம்"
வழங்குபவர் : போதகர் T.T. பிரான்சிஸ்

**புனித வாரம்**

### புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி)

குருத்து ஞாயிறு சிறப்பு மலர் சிறப்புச் செய்தி J. டேவிட் அவர்கள்
நாள் : 13 நேரம் : மாலை 07.00 மணி

புனித வியாழன் சிறப்பு மலர் சிறப்புச் செய்தி அருள்தந்தை இக்னேஸ் ஜோசப் அவர்கள்
நாள் : 17 நேரம் : மாலை 5.25 மணி

புனித வெள்ளி சிறப்பு மலர் சிறப்புச் செய்தி ஆனந்தா A.G. இராஜேந்திரம் அவர்கள்
நாள் : 18 நேரம் : மாலை 5.10 மணி

புனித சனி சிறப்பு மலர் சிறப்புச் செய்தி J. டேவிட் அவர்கள்
நாள் : 19 நேரம் : மாலை 7.00 மணி

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பு மலர் சிறப்புச் செய்தி பேரருள்தந்தை யோசப் பொன்னையா அவர்கள்
நாள் : 20 நேரம் : மாலை 6.30 மணி

**நிகழ்ச்சித் தொகுப்பு**
மலர்வேந்தன்



**தொடர்பு**
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் - 44,
மட்டக்களப்பு.

அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின்
உயிர்ப்பு விழா நல்வாழ்த்துகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org